# பொருளடக்கம்


| வ. எண் | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | சமூக நலம் | 9 |
| 2.1 | குழந்தைகள் நலம் | 17 |
| 2.2 | மகளிர் நலம் | 35 |
| 2.3 | மூத்த குடிமக்கள் நலன் | 60 |
| 2.4 | மூன்றாம் பாலினர் நலன் | 70 |
| 2.5 | தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் | 73 |
| 2.6 | தமிழ்நாடு சமூக நல வாரியம் | 75 |
| 2.7 | மாநில விருதுகள் | 76 |
| 3 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 79 |
| 4 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் | 94 |
| 5 | சமூகப் பாதுகாப்பு | 131 |
| 6 | சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள் | 172 |
| 7 | முடிவுரை | 178 |
| 8 | இணைப்பு | 180 |

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181

## கோரிக்கை எண் 45

# சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2019–2020

## அத்தியாயம் – 1

### முன்னுரை

பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோருக்கான ஒருங்கிணைந்த சமுதாயத்தை வடிவமைப்பதிலும், அதில் தேவையான மாற்றங்கள் செய்வதிலும் ஒரு முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு அரசு திகழ்கிறது. மேலும், இம்மாநில அரசு மேற்குறிப்பிட்டுள்ள அங்கத்தினர்களின் சமூக பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு தேவைகளை பூர்த்தி செய்து சமுதாயத்தில் அவர்களை பலப்படுத்துவதில் போதிய முன்னேற்றத்தை பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகளில் பெரும்பாலானவை பெண்களுக்கான பாலின சமத்துவம், பசியின்மை மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றை குறிக்கின்றன. தமிழ்நாடு அரசு பெண்கள் முன்னேற்றத்திற்கும், குழந்தைகள், முதியோர்கள் மற்றும்

மூன்றாம் பாலினர் ஆகியோர்களுக்கு சமவாய்ப்புகளை வழங்குவதற்கும், குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை வாழ்வின் அனைத்து நிலைகளிலும் மேம்பட தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட்டு வருகிறது

பெண் குழந்தைகளின் நிலையினை மேம்படுத்த சமூகநலத் துறையின் வாயிலாக பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெண் குழந்தைகள் உயர்கல்வி பயில ஊக்குவிப்பதுடன் பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளை பெருமையுடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கினையும் ஏற்படுத்துகிறது. தனித்துவம் வாய்ந்த தொட்டில் குழந்தை திட்டம் பெண் சிசுக் கொலையை தடுப்பதையும், ஆதரவின்றி கைவிடப்படும் குழந்தைகளுக்கு உரிய முறையில் தத்தெடுக்கப்படும் வரையிலான காலம்வரை முறையான கவனிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்குவதையும் உறுதிசெய்கிறது. குழந்தை திருமண தடைச் சட்டம், 2006–னை முறையாக செயல்படுத்தி வருவதன் மூலம் பெண் குழந்தைகளின் கல்வி மற்றும் சுகாதாரம் மேம்படுத்தப்படுவதுடன் இளவயது கர்ப்பம் சார்ந்த இடர்பாடுகளும் தவிர்க்கப்படுகிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள பெற்றோர்களின் பெண் குழந்தைகளுக்கு உரிய வயது வரை கல்வியை தொடர ஊக்கப்படுத்துவதுடன், அவர்களின் திருமணத்திற்கு திருமாங்கல்யம் செய்ய சமூக நலத்துறையின் தனித்துவமான திருமண நிதியுதவி திட்டம் உதவுகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் என்ற முன்னோடித் திட்டம், குழந்தைகள், இளம் பெண்கள், கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து, முன்பருவக் கல்வி, தன்சுத்தம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் காணும் பிரச்சினைகளை தீர்க்கும் நலப் பணிகளைச் செய்து வருகிறது. இத்திட்டம் அனைத்து பயனாளிகளையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த வளர்ச்சியை இலக்காக கொண்ட ஒரு விரிவான சேவையை வழங்கி வருகிறது. குழந்தைகளின் பிறப்பு முதல் 6 வயது வரையிலான காலத்திற்கு அவர்களுக்குத் தேவையான இணை உணவு, கூடுதல் சத்துணவு, சூடான சமைத்த உணவு வழங்குதல், சுகாதாரம் பேணுதல் மற்றும் முன்பருவக் கல்வி வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் பணிகளாக அமைந்துள்ளது. வளர் இளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு வழங்குவதுடன் சுகாதாரம்,

கல்வி, விழிப்புணர்வு மற்றும் அவர்தம் திறன் வளர்க்கும் சேவைகளையும் வழங்கி வருகிறது. மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்படி, அங்கன்வாடி மையங்கள் "எழுச்சிமிகு முன்பருவ வளர்ச்சி மையம்" என்ற வகையில் "முதல் கல்விக்கூடம்" ஆக முன்னிறுத்தப்பட்டு கற்றல், சத்துணவு மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை கூடுதல் கட்டமைப்பு மற்றும் பணியாளர்களைக் கொண்டு செயல்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. பிறந்த குழந்தை முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகள் வரை, இந்தியாவில் ஊட்டச்சத்து நிலைமையில் முன்னேற்றம் அடைவதை ஒரு இலக்காக கொண்டு தேசிய ஊட்டச்சத்து திட்டம் ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது. மூன்று ஆண்டிற்கான இத்திட்டம் 80:20 என்ற நிதி பங்கீடு வீதத்தில் 2017–2018–முதல் தொடங்கி செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் 1982–ஆம் ஆண்டு துவங்கப்பட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் பள்ளிக்குழந்தைகளின் பசிதீர்த்தல், வறுமை குறைத்தல் மற்றும் அதிகரித்து வரும் சமூக அவலங்களை தீர்க்கும் முன்னோடி திட்டமாக உள்ளது. பின்னர் உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி இத்திட்டமானது நாடு முழுவதும்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பள்ளி இடை நிற்றல் சதவிகிதத்தை குறைக்கவும், குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்குதலையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1 முதல் 10ஆம் வகுப்பு வரையிலான பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு. உணவின் ஊட்டச்சத்து மற்றும் கலோரிச் சத்தினை அதிகரித்து குழந்தைகளின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாகவும் அமைந்துள்ளது.

துயருறும் சூழலில் உள்ள குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை பாதுகாக்க ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டம், 1956, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 ஆகியவற்றினை நடைமுறைப்படுத்திடும் பணியினை சமூக பாதுகாப்புத் துறை செயல்படுத்தி வருகிறது.

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளுக்காக குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு

இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு நிறுவனங்கள், மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பிற்கான இல்லங்களை நடத்தி வருகின்றது.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட பெண்களின் கல்வி மற்றும் தொழிற்பயிற்சிகளை தங்கள் குழந்தைகளுடன் தங்கி பெற்றிட ஏதுவாக சேவை இல்லங்களை நடத்தி வருகிறது. தமிழக அரசு வன்முறையினால் பாதிக்கப்பட்ட மற்றும் துயரத்தில் உள்ள பெண்களுக்கு மறுவாழ்வு அளித்தல், தங்குமிடம், உணவு, உடை, ஆலோசனை, மருத்துவம், சட்டஉதவி ஆகியவற்றை அளித்திடும் நோக்கத்துடன் குறுகிய கால தங்கும் (Swadhar Greh) இல்லங்களை நடத்தி வருகிறது. மேலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய, வேலைக்கு செல்லும் பெண்களின் நலனுக்காக அவர்களுக்கு உகந்த பாதுகாப்பான பணிபுரியும் பெண்கள் விடுதிகளையும் சமூகநலத்துறை நடத்தி வருகிறது.

மூன்றாம் பாலினத்தவரின் நிலையினை மேம்படுத்தும் விதமாக அவர்களுக்கு அடையாள அட்டை, கல்வி உதவித்தொகை, குடியிருப்பு வசதி, ஓய்வூதியம், வாழ்வாதாரத்திற்கான பயிற்சிகள் மற்றும் நிதியுதவி அளித்தல் ஆகியவற்றை தமிழக அரசு செய்து வருகிறது.

தமிழ்நாடு 25.11.1985ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட "இலவச சீருடைகள் வழங்கும்" திட்டத்தின் வாயிலாக பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பதற்காக தற்போது 4 இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட துறையின் கீழ் இச்சீருடைகள் 98 பெண்கள் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தைத்து வழங்கப்படுகிறது இதன் மூலம் பெண்கள் நீட்டித்த வாழ்வாதாரம் பெற வழிவகை செய்கிறது. மேலும் விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களின் முன்னேற்றம் கருதி அவர்களுக்கு இலவசமாக தையல் இயந்திரங்களை சமூகநலத் துறை வாயிலாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

ஒருங்கிணைந்த முதியோர் இல்லங்களில் உள்ள மூத்த குடிமக்களின் வாழ்க்கை நலன் ஊக்குவிக்கப்படுவதுடன் அவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சிறப்பு மிக்க செயலாற்றும் திறனுடைய வாழ்வு உறுதி செய்யப்படுகிறது. வருவாய்த் துறை மூலமாக சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப் படுத்துவதில் சமூகநலத் துறை ஒரு ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது.

இத்துறையானது பல்வேறு திட்டங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் சமூக நல சட்டங்களை கொண்டு குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியோர்களை பாதுக்காத்து செயல்படுத்தி வருகிறது.

சமூகத்தின் பலதரப்பட்ட மக்களின் தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கான கொள்கைகளை உருவாக்கி, பல்வேறு நிகழ்ச்சிகள், திட்டங்கள் மற்றும் சமூகநீதிச் சட்டங்களை செயல்படுத்துவதில் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை முக்கிய பங்காற்றி வருகிறது.

******

# அத்தியாயம் –2
## சமூகநலம்

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை செயல்படுத்தி வரும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான பல்வேறு முக்கிய திட்டங்கள், குழந்தை திருமணம் மற்றும் பெண் சிசுக்கொலை ஆகிய கொடிய வழக்கங்களை ஒழித்து மாநிலத்தில் பாலின சமன்பாடு மற்றும் குழந்தை பாலின விகிதத்தினை மேம்படுத்துவதற்கு உதவி வருகிறது.


மாநில அரசு முதியோர்கள் சமூகத்தில் தங்களுக்கான சட்டபூர்வமான இடத்தினை நிலைநிறுத்தி கொள்ளவும், சமுதாயத்தில் பயனுள்ள ஒரு அங்கமாகவும் செயல்பட ஏதுவாக பல நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அரசு மூன்றாம் பாலினர்களை உறுப்பினர்களாக கொண்ட ‘‘மூன்றாம் பாலினருக்கான நல வாரியம்’’ அமைத்து அவர்களின் சமூக உட்சேர்க்கைக்கான வழிவகையினை செய்து நாட்டிலேயே முதன் மாநிலமாக திகழ்கிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளை சார்ந்தவர்களுக்காக செயல்படுத்தப்படும் புதுமையான திட்டங்கள் மாநிலத்திற்கு

பாராட்டுகளை குவித்துள்ளதோடு நாட்டிற்கே எடுத்துக்காட்டாக உள்ளன.

**சமூக நலத் துறையின் சேவைகள் மற்றும் நிறுவனங்கள்**




**நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள்**

அனைத்து மக்களும் அமைதி மற்றும் செழிப்போடு வாழ்வதை உறுதி செய்யவும், உலக பாதுகாப்பிற்கும், வறுமையை ஒழிப்பதற்கும், உலகளாவிய அழைப்பாக நீட்டித்த வளர்ச்சிக்கான இலக்குகள் அறியப்படுகின்றன. இது 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களையும் கொண்டுள்ளது. மத்திய அமைப்பான நிதி ஆயோக்

இந்தியாவின் நீட்டித்த வளர்ச்சிக்கான இலக்குகளை கண்காணித்து செயல்படுத்துகிறது.

பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கத்தை கொண்ட இலக்கு 5–க்கான செயல்பாட்டுத்துறையாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நியமிக்கப்பட்டுள்ளது.

*குறியீடு **5.1**: மகளிர் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான பலவகையான பாகுப்பாடுகளையும் அனைத்து இடங்களிலும் முடிவுக்கு கொண்டு வருதல்.*

பெண் சிசு கொலை தடுத்து, பெண் குழந்தையை காக்கவும், பாலின விகிதத்தை மேம்படுத்துவதற்கும், தொட்டில் குழந்தைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பெண் குழந்தை பாலின பாகுபாட்டை தடுத்து அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் நோக்கத்தில் முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பாலின பாகுபாடு அடிப்படையில் குழந்தைகளின் பாலினம் அறிந்து, கொல்லப்படுவதை தடுத்திடவும், பெண் குழந்தை உயிர் வாழ்வதையும், அவர்கள் பாதுகாப்பை உறுதி

செய்திடவும் ''பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம்'' செயல்படுத்தப்படுகிறது.

*குறியீடு 5.2: பொது மற்றும் தனியார் இடங்களில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் மற்றும் கடத்தப்படுதல் போன்ற பிற வகையான சுரண்டல்கள் உள்ளிட்ட அனைத்து விதமான வன்முறைகளை அகற்றுதல்.*

பாதிக்கப்பட்ட பெண்கள் அணுகி, உடனடி தீர்வு பெற ஏதுவாக குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி **(1098)**, பெண்களுக்கான கட்டணமில்லா தொலைபேசி **(181)**, ஒரு நிறுத்த மையம், மகளிர் காப்பகங்கள், பாதுகாப்பு இல்லங்கள், உஜ்ஜவாலா இல்லங்கள், தமிழ்நாடு மகளிர் ஆணையம் மற்றும் தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஆகியவை செயல்படுகின்றன. துயரத்தில் உள்ள பெண்கள் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் நோக்கத்தில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கான சேவை இல்லங்கள் மற்றும் குறுகிய கால தங்கும் விடுதிகள் செயல்படுத்தப் படுகின்றன.

பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கு பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2013, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 2006, வரதட்சணை தடுப்புச் சட்டம், குழந்தை திருமணம் தடுப்புச் சட்டம், 2006, இளைஞர் நீதிச் சட்டம், 2015, பாலியல் வன்கொடுமையிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 ஆகியவை இத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*குறியீடு **5.3**: குழந்தை திருமணம், இளம் வயது திருமணம், கட்டாய திருமணம், பெண் உறுப்பு சிதைத்தல் உள்ளிட்ட கொடிய பழக்கங்களை ஒழித்தல்.*

குழந்தை திருமணம் என்பது ஆணுக்கு நடந்தாலும் அல்லது பெண்ணுக்கு நடந்தாலும் குழந்தைகளின் உரிமைகளை அத்துமீறும் செயலாகும். அவர்களின் அடிப்படை உரிமைகளான சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வியினை உறுதிப்படுத்தவும், வன்கொடுமை, ஏளனம் மற்றும் ஏமாற்றப்படுதல் ஆகியவற்றிலிருந்து அவர்களை காத்திடவும் குழந்தை திருமண தடுப்புச் சட்டத்தை

இத்துறை செயல்படுத்தி வருகிறது. குழந்தை திருமணத்தை ஒழித்திடும் நோக்கத்தில் திருமண நிதியுதவி திட்டங்கள் பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடையும் போது பயனடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

*குறியீடு 5.4: சமூக பாதுகாப்பு, பொது சேவைகள் மற்றும் உள் கட்டமைப்பு வழிவகைகள் மூலம் ஊதியமற்ற பராமரிப்பு மற்றும் குடும்ப பணிகளுக்கு மதிப்பு மற்றும் அங்கீகாரம் அளித்தல் மற்றும் நாட்டிற்கு ஏற்ற வகையில் வீட்டிலும், குடும்பத்திலும் பொறுப்புகளை பகிர்ந்துக் கொள்வதை ஊக்குவித்தல்.*

முதியோர் மற்றும் மூன்றாம் பாலினத்தோர் சமூகத்தில் மதிப்புள்ளவர்களாக வாழ்வதற்கும், அவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாகவும் அரசு கொள்கைகளை உருவாக்கி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் பொருளாதார முன்னேற்றம் பெற இலவச தையல் இயந்திரங்களை அரசு வழங்கி வருகிறது. சமுதாயத்தில் நலிவடைந்த தரப்பினரை பாதுகாக்கும்

விதமாக சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

> *குறியீடு **5.5**: அரசியல், பொருளாதாரம் மற்றும் பொது வாழ்வில் பெண்களின் முழுமையான, பயனுள்ள பங்கேற்பு மற்றும் அனைத்து நிலைகளிலும் முடிவெடுக்கும் தலைமைக்கும் சம வாய்ப்புகள் அளித்தல்.*

குறைந்த மற்றும் நடுத்தர வருமான பிரிவினைச் சார்ந்த பணிபுரியும் மகளிர் குறைந்த வாடகையில் பாதுகாப்பாக தங்குவதற்கு பணிபுரியும் மகளிருக்கான விடுதிகளை இத்துறை நடத்தி வருகிறது. அரசு ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சி துறைகளின் மூலம் உள்ளாட்சிகளில் பெண்களுக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு உறுதி செய்துள்ளது.

> *குறியீடு **5.6**: மக்கட்தொகை மற்றும் வளர்ச்சி குறித்த பன்னாட்டு மாநாட்டிலும், செயல்பாட்டிற்கான பீஜிங் மாநாட்டிலும் ஒப்புக் கொண்ட நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு, பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் உரிமைகளை அனைவருக்கும் உறுதிப்படுத்துதல் மற்றும் மறுசீராய்வு மாநாடுகள் மூலம் நடவடிக்கைகளை கண்காணித்தல்.*

அரசு சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் மூலம் அனைவருக்கும் சுகாதார உதவிகள் கிடைக்கும் வகையிலும், பெண்களின் இனப்பெருக்க முடிவெடுக்கும் உரிமையை பாதுகாக்கும் விதத்திலும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறைந்த எடையுள்ள குழந்தைகள் பிறப்பதை தவிர்ப்பதற்கும், ஏழை கர்ப்பிணிகள் தங்கள் கர்ப்ப காலத்தின் போதிய ஊட்டச்சத்தை உறுதி செய்யவும், வருமான இழப்பினை ஈடு செய்யும் நோக்கத்தோடு மகப்பேறு நிதியுதவி திட்டம் செயல்படுத்தி வருகிறது.

மேலே குறிப்பிட்ட இலக்கைத் தவிர, வறுமையை ஒழித்திடும் நோக்கம் கொண்ட இலக்கு 1–ஐ அடைய, பள்ளி குழந்தைகளுக்கு சீருடை தைக்கும் பணியின் மூலமாகவும், குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கும் சத்துமாவு தயாரிக்கும் பணியின் மூலமாகவும், நீடித்த வருமானம் உறுதியாக பெற மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் உதவுகின்றன. பசி கொடுமையை ஒழிப்பதை நோக்கமாக கொண்ட இலக்கு–2ஐ அடைய, சிறந்த சுகாதார முறையில் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும்

சத்துணவு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மேலும், குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து, முன்பருவக் கல்வி மற்றும் சுகாதாரத் தேவைகளை நிறைவேற்றும் முன்னோடி திட்டமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும், அமைதி, வளமை மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்திட இத்துறை தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது.

## 2.1 குழந்தைகள் நலம்

குழந்தை நல சேவைகள் மற்றும் திட்டங்கள் யாவும், 18 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் உயிர் வாழ்வதற்கான உரிமை, சமத்துவம், கல்வி கற்பதற்கான அவர்களின் உரிமைகளை காக்கவும் மற்றும் பொருளாதார ரீதியில் சுரண்டப்படுதல் மற்றும் தவறாக பயன்படுத்தப்படுதலில் இருந்து அவர்களை பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டவை ஆகும். இந்த துறையானது, பெண் குழந்தைகளுக்கு எதிரான அனைத்து விதமான பாலின பாகுபாடுகள் மற்றும்

வன்முறைகளை முற்றிலும் ஒழிப்பதை நோக்கமாக கொண்டும், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் ஐந்தாவது இலக்கின் குறிக்கோள்களை நிறைவேற்றும் விதமாகவும், பெண் குழந்தைகளின் நலனுக்கான கீழ்கண்ட திட்டங்களையும், சட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

1. தொட்டில் குழந்தைத் திட்டம்
2. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்
3. பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம்
4. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள்
5. குழந்தை திருமண தடைச் சட்டம்–2006

### 2.1.1 தொட்டில் குழந்தைத் திட்டம்

"தொட்டில் குழந்தைத் திட்டம்" 1992–ல் சேலம் மாவட்டத்தில், பெண் சிசுக்கொலை வழக்கத்தை தடுக்கும் நோக்கில் நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டது. இந்த புதுமையான திட்டத்தின் மூலம் பதிவு பெற்ற தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் தத்து நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டு சிசுக்கொலையிலிருந்து மீட்கப்பட்டு, அக்குழந்தைகள் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்பட்டது.

தொட்டில் குழந்தை திட்டம் 2001ஆம் ஆண்டு மறுவடிவாக்கம் செய்யப்பட்டு, மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டன. மேற்கண்ட மாவட்டங்களில் குழந்தைகளின் உடனடி தேவைகளை கவனிப்பதற்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய வரவேற்பு மையங்கள் திறக்கப்பட்டு நிராதரவாக விடப்படும் குழந்தைகளை பெறுவதற்கு மருத்துவமனைகளில் தொட்டில்கள் வைக்கப்பட்டன.

இத்திட்டத்தின் வெற்றிகரமான செயல்பாட்டினால் குழந்தை பாலின விகிதம் உயர்ந்ததையடுத்து, இத்திட்டம் பாலின விகிதம் குறைவாக இருந்த கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்கு 2011ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டது.

கடந்த 2018–19ஆம் ஆண்டில் தொட்டில் குழந்தை திட்டம் மூலமாக, 108 (ஆண் 45, பெண் 63) பெறப்பட்டு உள்ளனர். இத்திட்டம் தொடங்கியது முதல் மார்ச் 2019 வரை 5,239 (ஆண்–1062, பெண்–4177) குழந்தைகள் பெறப்பட்டுள்ளனர். அவர்களில் 3669 குழந்தைகள் உள்நாட்டு

தத்தெடுப்பிற்கும், 269 குழந்தைகள் வெளிநாட்டு தத்தெடுப்பிற்கும் வழங்கப்பட்டு உள்ளனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.44.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.2 முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

பெண் குழந்தைகளுக்கான முன்னோடி மற்றும் வழிகாட்டும் திட்டமாக முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் 1992ஆம் ஆண்டு, அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது சிறு குடும்ப நெறியை ஊக்குவிக்கவும், பாலின வேறுபாட்டை களையவும், ஏழைக் குடும்பங்களில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு பயன் அளிக்கும் விதமாக அரசால் நேரடியாக உதவி புரியும் திட்டமாகும்.

**திட்டத்தின் நோக்கம்:-**

- இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தவுடன் குடும்ப கட்டுப்பாடு செய்து கொள்ள பெற்றோர்களை ஊக்குவித்தல்.
- பெண் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் பெண் குழந்தைகளுக்கு சமூக மற்றும் பொருளாதார அதிகாரத்தினை வழங்குதல்.

- பெண் குழந்தைகளின் நிலையை மேம்படுத்த குடும்பத்தின் பங்கினை உறுதி செய்தல்.
- பள்ளிகளில் பெண் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல், அவர்களுக்கு குறைந்த பட்சம் 10ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஊக்குவித்தல்.
- 18 வயதுக்கு பிறகே திருமணம் செய்து கொள்ளும் எண்ணத்தினை பெண் குழந்தைகளிடம் ஊக்குவித்தல்.

**திட்டத்தின் வகைகள்**

| வ. எண் | திட்டங்கள் | ஆரம்ப முதலீட்டு தொகை (ரூ) | திட்டத்தில் பயன்பெற தேவையான தகுதிகள் |
|---|---|---|---|
| 1 | திட்டம்–1 (ஒரு பெண் குழந்தை) | ரூ.50,000 | குடும்பத்தில் ஒரே ஒரு பெண் (அ) இரு பெண் குழந்தை மட்டும் இருக்க வேண்டும். ஆண் குழந்தை இருக்க கூடாது. எதிர்காலத்தில் ஆண் குழந்தையை தத்தெடுக்கவும் கூடாது.<br>பெற்றோரில் ஒருவர் 35 வயதிற்குள் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டிருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 2 | திட்டம்–2 (இரண்டு பெண் குழந்தைகள்) | ரூ.25,000 | விண்ணப்பிக்கும் போது குழந்தைகளின் பெற்றோர் தமிழ்நாட்டில் 10 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும்.<br>குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/க்குள் இருக்க வேண்டும்.<br>திட்டம்–1ல், குழந்தையின் 3 வயது முடிவதற்குள்ளும், திட்டம்–2ல் இரண்டாவது குழந்தையின் 3வயது முடிவதற்குள்ளும் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பிக்க வேண்டும்.<br>முதல் மற்றும் இரண்டாம் பிரசவங்களின்போது, ஒன்றுக்கு மேற்பட்ட பெண் குழந்தைகள் இருப்பின், அவர்கள் திட்டம் 2ன் கீழ் பயன் பெறுவர். |

**முதிர்வுத் தொகை விவரம்**

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் இத்திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளின் பெயரில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட

மாதந்தோறும், திரளும் வட்டியுடன் கூடிய தொகை வழங்கும் பணப்பெருக்கு திட்டத்தின் கீழ், தொகை முதலீடு செய்யப்படுகிறது. மேற்படி வைப்புத் தொகை ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதுப்பிக்கப்பட்டு 18 வயது நிறைவடைந்ததும் திரண்ட வட்டி விகிதத்துடன் கூடிய வைப்புத் தொகையின் முதிர்வுத் தொகை அப்பெண் குழந்தைக்கு வழங்கப்படுகிறது. இப்பயனை அடைய பெண் குழந்தை பத்தாம் வகுப்பு வரை படித்து, பொதுத் தேர்வு எழுதியிருத்தல் வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் முதிர்வுத் தொகை அப்பெண் குழந்தையின் உயர்கல்விக்கு உதவுகிறது.

இத்திட்டத்தின் கீழ் மார்ச் 2019 வரை ரூ.1462.75 கோடி தொகை வைப்பீடு செய்யப்பட்டு 9,49,542 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 2018–19ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ், 37,024 பெண் குழந்தைகள் பயன் அடைந்து உள்ளனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.140.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.3 பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம்

“பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்’’ என்ற திட்டம் கடந்த 2015ஆம் ஆண்டு, உயிருடன் பிறக்கும் 1000 குழந்தைகளில், குழந்தை பாலின விகிதம் தேசிய சராசரி அளவான 918 விட குறைவாக இருந்த மாவட்டங்களில் மத்திய அரசால் துவக்கப்பட்டது. 2011ல் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு, ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே, ஆண்/பெண் விகிதாச்சாரம் ஆபத்தான அளவில் குறைந்து வருவதை சுட்டிக் காட்டியதை தொடர்ந்து, இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

**திட்டத்தின் நோக்கம்:-**

i. பாலின பாகுபாடு அடிப்படையில் குழந்தைகளின் பாலினம் அறிந்து கொல்லப்படுவதை தடுத்தல்.

ii. பெண் குழந்தை உயிர் வாழ்வதையும் அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல்.

iii. பெண் குழந்தையின் கல்வி மற்றும் பங்கேற்பினை மேம்படுத்துதல்.

**திட்டத்தின் செயல்பாடு**

தமிழ்நாட்டில், முதன் முதலில் குழந்தை பாலின விகிதம் தேசிய அளவை விட மிக குறைவாக இருந்த கடலூர் மாவட்டத்தில், "பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டம் துவக்கப்பட்டது. திட்டத்தின் 3 வருட வெற்றிகரமான செயல்பாடு மாவட்டத்தின் பிறப்பு பாலின விகிதத்தை 886ல் இருந்து 956ஆக, உயர்த்தியதுடன், 2017ல் இத்திட்டத்திற்கான தேசிய விருதினையும் பெற்று தந்தது. 08.03.2018 அன்று இத்திட்டம் நாட்டின் 640 மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் குழந்தை பாலின விகிதத்தை கருத்திற் கொண்டு அரியலூர், தர்மபுரி, நாமக்கல், சேலம், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்கள் அனைத்து நிலைகளிலும் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைந்த செயல்பாட்டினை மேற்கொள்ளும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்பட்டன.

மீதமுள்ள 21 மாவட்டங்களில் பெண் குழந்தைகளின் முக்கியத்துவம் மற்றும் அவர்களது கல்வியை மேம்படுத்துவதற்காக இத்திட்டம், 360 கோண அணுகு

முறையுடன், தொலைத்தொடர்பு மற்றும் ஊடக செய்திகளின் வாயிலாக செயல்படுத்தப்படும்.

**மாநில செயல்பாடுகள்**

மாநில அரசு பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தினை பயனுள்ள வகையில் நன்கு செயல்படுத்திட பல துறைகளுக்கும் செயல்பாடுகள் வகுத்து அரசாணை வெளியிட்டது, பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்ட வழிகாட்டி தமிழ் கையேட்டினை களப் பணியாளர்களுக்கு உதவும் வகையில் வழங்கியது, திட்ட ஆய்விற்கான படிவத்தினை வடிவமைத்தது மற்றும் பொது மக்களுக்கு திட்டத்தினை பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்திட பல்வேறு தகவல் தொடர்பு சாதனங்கள் உருவாக்கியது என பல முயற்சிகளை மேற்கொண்டது.

இதே போன்று மாவட்ட குழுக்கள், ஒவ்வொரு பெண் குழந்தை பிறப்பையும் வாழ்த்து கடிதம் மூலம் சிறப்பித்தல், சுகாதார பொருட்களை தாய்மார்களுக்கு வழங்குதல், பேரணிகள், மனித சங்கிலி, மாரத்தான், கையெழுத்து இயக்கம் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கு பெறச்

செய்து, பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தின. மேலும் ஆண், பெண் தகவல் பலகை மூலம் கிராமங்களில் பிறப்பு பாலின விகிதத்தினை கண்காணித்தன. இச்செயல்பாடுகள் கடந்த 3 ஆண்டுகளில் மாநிலத்தின் பிறப்பு பாலின விகிதம் 917 (2014–15)ல் இருந்து 943 (2017–18) ஆக உயர்ந்திட உதவியது.

**மாநிலத்திற்கான தேசிய விருது–2019**

"பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டத்திற்கு அனைத்து வகையிலும் உறுதுணையாக இருந்து, வழிநடத்தி, கண்காணித்து, திட்ட இலக்குகளை எய்திட தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக மத்திய அரசு திட்டத்திற்கான தேசிய விருது–2019 ஐ தமிழகத்திற்கு வழங்கி சிறப்பித்தது.

**மாவட்டத்திற்கான தேசிய விருது–2019**

திருவண்ணாமலை மாவட்டம் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக "சிறந்த சமூக ஈடுபாட்டிற்காக" தேர்வு செய்யப்பட்டு மாவட்டத்திற்கான தேசிய விருதினை பெற்றது.

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181

திட்டத்தின் தனிப்பட்ட செயல்பாடுகளுக்காக தேர்வு செய்யப்பட்ட **11** மாவட்டங்களுக்கும் **ரூ.5.5** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.






**24.01.2019** அன்று புதுடில்லியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசு சிறந்த மாநிலமாக தேசிய விருது பெற்றது.

**நாரி சக்தி புரஸ்கார் விருது**

2018ஆம் ஆண்டு பெண்குழந்தை பிறப்பு பாலின விகிதத்தை அதிகப்படுத்தியதற்காகவும், திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதிற்காகவும் தமிழ்நாடு, நாரி சக்தி புரஸ்கார் தேசிய விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு இந்திய குடியரசு தலைவர் அவர்களால், உலக மகளிர் தினம் மார்ச் 8, 2019 அன்று புது தில்லியில் வழங்கப்பட்டது. இவ்விருதானது, ரூ.1,00,000 காசோலை மற்றும் சான்றிதழ் உள்ளடக்கியது.



நாரி சக்தி புரஸ்கார்–2018 தேசிய விருதினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெறப்பட்டது.

### 2.1 .4 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள்

தத்தெடுக்க விரும்பும் பெற்றோர்கள், மாற்றுத் திறனாளிகளாக உள்ள குழந்தைகளை தவிர்ப்பதால் அவர்கள் காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் உள்ள சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளின் இல்லங்களில் பராமரிக்கப்படுகின்றனர். இக்குழந்தைகளை பராமரிக்க தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் இல்லங்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது. தற்போது இவ்வில்லங்களில் 91 குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.37.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.5 குழந்தை திருமண தடைச் சட்டம் – 2006

இந்தியாவில் பெண்களுக்கு 18 வயதும், ஆண்களுக்கு 21 வயதும் திருமணத்திற்கான சட்டபூர்வ வயதாக உள்ளது. இவ்வயதுகளின் கீழ் நடைபெறும் எந்த திருமணமும் சட்டத்தை மீறிய செயலாக கருதப்படுகிறது. குழந்தை திருமணம் என்பது ஆணுக்கு நடந்தாலும் அல்லது பெண்ணுக்கு நடந்தாலும், குழந்தைகளின் உரிமைகளை அத்துமீறும் செயலாக உள்ளது.

அது குழந்தைகளிடமிருந்து அவர்களின் குழந்தை தன்மையை புறந்தள்ளி, அவர்களின் அடிப்படை உரிமைகளான சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி போன்றவற்றை மறுப்பதுடன், குழந்தைகளை வன்கொடுமை, ஏளனம் மற்றும் ஏமாற்றப்படுதல் ஆகியவற்றிற்கு ஆட்படுத்துகிறது.

**சட்டத்தை செயல்படுத்துதல்**

சமூகத்தில் நடைபெற்று வரும் குழந்தைத் திருமணங்களை ஒழிப்பதற்காக மத்திய அரசால் **1929–**ல் இயற்றப்பட்ட குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக குழந்தைத் திருமண தடைச்சட்டம் **2006–**ல் இயற்றப்பட்டது. குழந்தை திருமண தடைச் சட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக தமிழக அரசால் மாநில விதிகள் ஏற்படுத்தப்பட்டு **30.12.2009** அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்திட ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட சமூகநல அலுவலர்கள், குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைத் திருமணம் நடைபெறுவது குறித்த தகவல் எவ்வகையில் கிடைக்கப் பெற்றாலும் புகாரினை ஏற்று துரித நடவடிக்கை

எடுக்க குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குழந்தைத் திருமணத்தை தடுப்பதற்கும், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் நிவாரணம் வழங்குவதற்கும், அத்தகைய திருமணங்கள் நடத்துபவர்கள் மற்றும் ஏற்பாடு செய்பவர்கள் மீது அதிகபட்ச தண்டனையை அளிப்பதற்கும் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. குழந்தை திருமணங்களை தடுக்கவும், அது குறித்து தகவல் தெரிவித்திடவும், ஊராட்சித் தலைவர்கள் தலைமையில் ஊராட்சி அளவிலான குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பெண் குழந்தைகளின் நலனுக்கான தமிழக அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், அவர்களின் 18 வயது நிரம்பிய பின் பயன்அடையும் வகையிலும், அவர்களின் உயர்கல்வியுடன் இணைத்தும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், குழந்தை திருமண தடைச் சட்டம் 2006 குறித்த விழிப்புணர்வினை பொது மக்களுக்கு ஏற்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும் தகவல் கல்வி தொடர்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

2008ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் 8834 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டில் 1965 குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு உள்ளன.

### 2.1.6 பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கான மாநில விருது

பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து செயல்படும் குழந்தைகளின் முயற்சிகளை அங்கீகரித்து அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், பாராட்டும் வகையிலும் நாட்டிலேயே முதன் முறையாக தமிழக அரசால், 18 வயதுக்கு கீழுள்ள பெண் குழந்தைகளுக்கு தேசிய பெண் குழந்தைகள் தினமான ஜனவரி 24 அன்று ஒவ்வொரு ஆண்டும் வழங்கிடும் வகையில் மாநில விருதினை அறிவித்தது.

கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி. கே,ஆர்.ரக்ஷனா, என்பவருக்கு சமூக பிரச்சனைகள் மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்புகளை களைந்திட மேற்கொண்டு வரும் அவரது தொடர்ச்சியான செயல்பாடுகளுக்காகவும், அனைத்து குழந்தைகளுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்ததற்காகவும், 2018–19–க்கான சிறந்த பெண் குழந்தைக்கான மாநில விருதினை வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

### 2.2 மகளிர் நலம்

நாட்டின் வளர்ச்சியில் கவனம் செலுத்தி வரும் தமிழ்நாடு அரசு, சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மகளிர் மற்றும் பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக அநேக திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மகளிர் நலமானது பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பெண்களுக்கு தேவையான உணவு, உறைவிடம், மருத்துவ வசதி, கல்வி, சட்ட உதவி, ஆலோசனை போன்ற உதவிகளை அளித்து சமுதாயத்தில் சமநிலை மற்றும் சமூக பாதுகாப்பு அடையும்படி செய்கிறது.

#### 2.2.1 திருமண நிதி உதவித் திட்டங்கள்

திருமண நிதியுதவித் திட்டமானது தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு தலையாய திட்டமாகும். திருமண நிதியுதவித் திட்டத்தினை மேம்படுத்தும் நோக்குடன், 2011–ஆம் ஆண்டு முதல் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த நிதியுதவியுடன் "திருமாங்கல்யம்" செய்ய 4 கிராம் தங்க நாணயம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏழைப் பெண்களின் திருமணத்தை மேலும் சிறப்பாக நடத்த ஏதுவாக 23.05.2016 முதல் 4 கிராம் தங்க நாணயமானது 8 கிராமாக உயர்த்தப்பட்டுள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சி த் தலைவி செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் **21.09.2016** அன்று திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் திருமண நிதியுதவி மற்றும் திருமாங்கல்யம் செய்ய **8** கிராம் தங்க நாணயம் வழங்கினார்கள்

அரசின் ஐந்து வகையான திருமண நிதியுதவித் திட்டமானது கீழ்காணும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| திட்டத்தின் பெயர் | ஆண்டு வருமான வரம்பு | வயது வரம்பு | கல்வித் தகுதி | விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு |
|---|---|---|---|---|
| மூவலூர் இராமாமிர்தம் – ஏழைப்பெண்கள் | ரூ.72000 | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | குறைந்தபட்சம் 10ஆம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி பழங்குடியினர்– 5ஆம் வகுப்பு | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் |
| ஈ.வெ.ரா. மணியம்மையார் – விதவை மகள் | ரூ.72000 | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | இல்லை | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் |
| அன்னை தெரசா– ஆதரவற்ற பெண் | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 18 வயது மணமகன் – 21 வயது | இல்லை | திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்னர் |
| டாக்டர் தர்மாம்பாள் – விதவை மறுமணம் | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 20 வயது மணமகன் – 40 வயது | இல்லை | மறுமணம் முடிந்த 6 மாத காலத்திற்குள் |
| டாக்டர் முத்துலெட்சுமி – கலப்பு திருமணம் ** திட்டம் I & II | வருமான வரம்பு இல்லை | மணமகள் – 20 வயது மணமகன் – 40 வயது | இல்லை | திருமணம் முடிந்த இரண்டு ஆண்டுகளுக்குள் |

****திட்டம் –I:** கலப்புத் திருமண தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் இனத்தவராகவும், மற்றொருவர் பிற இனத்தை சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

**திட்டம்–II:** கலப்புத் திருமணம் செய்பவர்களில் ஒருவர் முற்பட்ட வகுப்பினராகவும், மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், ஈ.வெ.ரா மணியம்மையார் மற்றும் அன்னை தெரசா ஆகிய திருமண நிதியுதவி திட்டங்களில், 8 கிராம் தங்க நாணயத்துடன் பட்டம் / பட்டயம் பெற்றவர்களுக்கு ரூ.50,000மும், பட்டதாரி அல்லாதோருக்கு ரூ.25,000மும் நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ், பட்டதாரி அல்லாதோருக்கான நிதியுதவித் தொகையான ரூ.25,000ல் மின்னனு பரிமாற்றம் மூலம் ரூ.15,000மும், ரூ.10,000யை தேசிய சேமிப்பு பத்திரமாகவும், பட்டம்/பட்டயம் பெற்றோருக்கான

நிதியுதவி தொகை ரூ.50,000ல் மின்னனு பரிமாற்றம் மூலம் ரூ.30,000மும் ரூ.20,000யை தேசிய சேமிப்பு பத்திரமாகவும் 8 கிராம் தங்க நாணயத்துடன் வழங்கப்படுகிறது.

2018–2019ஆம் நிதியாண்டில் ஐந்து வகையான திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், 1,20,230 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். 2011–2012ஆம் ஆண்டு முதல் 2018–2019ஆம் ஆண்டு வரை 11,46,819 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ஐந்து வகையான திருமண நிதியுதவித் திட்டங்களுக்காக ரூ.726.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.2 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

விதவைகள், ஆதரவற்ற பெண்கள், பொருளாதாரத்தில் நலிவுற்ற பெண்கள், ஆகியோர் சுயமாக தொழில் செய்து தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ளும் பொருட்டு, இலவச தையல் இயந்திரங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடைய ஆண்டு வருமானம் ரூ.72,000 ஆக இருக்க வேண்டும். 2018–2019ஆம்

நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் 2,978 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.135.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.2.3அரசு சேவை இல்லங்கள்**

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் ஏழைப்பெண்கள், ஆதரவற்ற பெண்கள், விதவைகள் ஆகியோருக்கு தங்கும் இடம், உணவு, சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதி போன்றவற்றை அளிக்க சென்னை, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் ஆகிய எட்டு மாவட்டங்களில் அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகிறது.

மேற்படி அடிப்படை வசதிகளுடன், அவர்களின் திறனை மேம்படுத்த தொழிற்பயிற்சி, ஆங்கிலத்தில் பேசுவதற்கான பயிற்சி, கணினி பயிற்சி, கலந்தாய்வு மற்றும் வேலைவாய்ப்பு குறித்து வழிகாட்டுதல் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. பல்வேறு சூழ்நிலைகளில் பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் செய்த பெண்கள் இவ்வில்லங்களில் குழந்தைகளுடன் தங்கி தங்கள் பள்ளிப் படிப்பையும் தொடரலாம். பெண் குழந்தைகள் 12ஆம் வகுப்பு வரையிலும்,

ஆண் குழந்தைகள் 5ஆம் வகுப்பு வரையிலும் இச்சேவை இல்லங்களிலேயே தங்கி கல்வி பயிலலாம்.

அனைத்து சேவை இல்லங்களுக்கும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. தற்பொழுது இவ்வில்லங்களில் 479 உள்ளுறைவோர்கள் தங்கி பயனடைந்து வருகின்றனர்.

அரசு சேவை இல்லங்களில் படித்து முடித்த பெண் குழந்தைகள் தொழிற்சார் கல்வி பயின்றிட ரூ.50,000மும் மற்றும் பட்டப்படிப்பு / பட்டயப்படிப்பு பயிலுவதற்கு ரூ.30,000மும் நிதியுதவி அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.

2019–2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் அரசு சேவை இல்லங்களுக்கு ரூ.742.23 இலட்சமும் மற்றும் பெண் குழந்தைகள் உயர்கல்வி பயின்றிட ரூ.33.78 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.4 மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

தமிழ்நாடு அரசு பல்வேறு சமூக பொருளாதார திட்டங்களை கூட்டுறவு சங்கங்களின் மூலம் செயல்படுத்தி

வருவதன் மூலம் பெண்களுக்கு சுய அதிகாரம் அளித்து, அவர்களது பொருளாதார தேவையை பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல், பெண்களைச் சுதந்திரமாகவும் தங்களது திறன்களைக் கொண்டு சுயசார்புள்ளவர்களாகவும் சம நிலையை அடைவதற்கு வழிவகை செய்து வருகிறது.

மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் மொத்தம் 123 சங்கங்கள் சமூக நலத் துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இதில் 98 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் செயற்பதிவாளர் / சமூக நல ஆணையர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் செயல்படுகின்றன. இச்சங்க உறுப்பினர்கள் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் பயன்பெறும் பள்ளி மாணவ மாணவிகளுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மாணவ மாணவியர்களுக்கும் நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்குவதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா சீருடை தைக்கும் பணியில்
மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள்.

**25** இணை உணவு தயாரிப்போர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத் இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பபடுகின்றன.

கூட்டுறவு சங்கங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கான துறை செயல்பாடுகள் விவரம் பின்வருமாறு :–

| வ. எண் | கூட்டுறவு சங்கங்களின் வகைகள் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர் களின் எண்ணிக்கை | செயல்பாடுகள் |
|---|---|---|---|---|
| 1 | மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் | 83 | 83,158 | சத்துணவு திட்டம் மற்றும் ஏனைய நலத் துறைகளின் கீழ் பயனடையும் மாணவ மாணவியருக்கு 4 இணை சீருடைகள் தைக்கும் பணி. |
| 2 | எழுதுபொருள் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் (தையல் பணிகளும் அளிக்கப் பட்டுள்ளது) | 15 | 1,017 | எழுதுபொருள் தயாரிப்பு மற்றும் சத்துணவு திட்டம் மற்றும் ஏனைய நலத்துறைகளின் கீழ் பயனடையும் மாணவ / மாணவியர்களுக்கு 4 இணை சீருடைகள் தைக்கும் பணி |
| 3 | இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 1,450 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயனடையும் குழந்தைகளுக்கு இணை உணவு தயாரித்தல். |
| **மொத்தம்** | | **123** | **85,625** | |

இத்தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சமுதாயத்தில் உள்ள ஏழைப் பெண்களுக்காக பிரத்யேகமாக செயல்பட்டு வருகின்றன. 18 வயதுக்கு மேற்பட்ட, வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள பெண்கள், ஆதரவற்ற விதவைகள் மற்றும் ஆதரவற்ற தையல் தெரிந்த பெண்கள் இச்சங்கங்களில் உறுப்பினராக தகுதியுடையவர் ஆவர். இந்த உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதன் வாயிலாக ஆண்டு முழுவதும் அவர்கள் வருமானம் பெற வழி வகை செய்யப்பட்டுள்ளது.

2012-2013ஆம் ஆண்டு முதல் சத்துணவு திட்டத்தில் பயன்பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கு 4 இணை சீருடைகள் வழங்குவதால் உறுப்பினர்களின் வருவாய் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. 2018-2019ஆம் ஆண்டில் 39.45 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு 4 இணை சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது. அதற்காக ரூ. 83.74 கோடி பள்ளிக் கல்வித் துறை மூலம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் (NCDC) கூட்டுறவு சங்க செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் விதமாக மண்டல அளவில் ஒவ்வோர் ஆண்டும் சிறந்த (Excellence) மற்றும் தகுதி (Merit) விருதுகள் வழங்கி வருகின்றது. அதனடிப்படையில் 2018ஆம் ஆண்டு மகளிர் பிரிவிற்கு வழங்கப்பட்ட 3 விருதுகளையும் சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் பெற்றுள்ளன.




சென்னை மண்டல தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் வாயிலாக சிறந்த மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கத்திற்கான விருது – **2019** காஞ்சிபுரம் மகளிர் தையற் தொழிற் கூட்டுறவு சங்கத்திற்கு **21.02.2019** அன்று வழங்கப்பட்டது.

### 2.2.5 குறுகிய கால தங்கும் இல்லங்கள் (ஸ்வதார் கிரஹ்)

இக்கட்டான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கு ஸ்வதார் கிரஹ் என்ற திட்டம் மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இத்திட்டத்தின் மூலம் தங்குமிடம், உணவு, உடை, ஆலோசனை, பயிற்சி, மருத்துவம் மற்றும் சட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வில்லங்களில் பாதிக்கப்பட்ட அனைத்து வகையான பெண்களும் அதிக பட்சமாக 5 வருடங்கள் வரை தங்கலாம். 55 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இவ்வில்லங்களில் 60 வயது வரை தங்க வைக்கப்பட்டு அதன் பின்னர் முதியோர் இல்லங்களுக்கு மாற்றப்படுவர். ஒரு ஸ்வதார் இல்லத்தில் 30 பெண்கள் தங்கும் வகையில் தமிழ்நாட்டில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் 36 ஸ்வதார் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.558.45 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.2.6 மாநில பெண்கள் வள மையம் (SRCW)**

தமிழ்நாட்டில் மாநில பெண்கள் வள மையம் (State Resource Centre for Women) 2014ஆம் ஆண்டு மத்திய அரசின் பெண்கள் மேம்பாட்டிற்கான தேசிய குழுமம் வாயிலாக துவங்கப்பட்டது. இம்மையமானது மத்திய மற்றும் மாநில அரசின் 60:40 என்ற விகிதாச்சாரத்திலான நிதியுதவியுடன் பெண்களுக்கான முன்னோடித் திட்டங்களை இணைந்து ஆய்வு செய்வதற்கும், மேற்பார்வையிடுவதற்கும் தற்போதுள்ள துறையின் கீழுள்ள அமைப்புகளின் நிர்வாகத்திற்கு பங்காற்றி வருகிறது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்கென மத்திய அரசால் ரூ.38.90 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.**

கீழ்க்காணும் திட்டங்கள் மாநில பெண்கள் வள மையத்தால் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**2.2.6.1 மகிளா சக்தி கேந்திரா (MSK)**

மகிளா சக்தி கேந்திரா என்ற திட்டத்தின் வாயிலாக கிராமப்புற பெண்களின் மேம்பாட்டிற்காக திறன் வளர்ப்பு, வேலைவாய்ப்பு, தொழில்நுட்ப கல்வியறிவு, சுகாதாரம் மற்றும்

ஊட்டச்சத்து போன்ற பல்வேறு ஒருங்கிணைந்த சேவைகளை மாவட்ட மற்றும் வட்டார அளவில் செயல்படுத்துகிறது. இத்திட்டமானது மத்திய மற்றும் மாநில அரசின் 60:40 என்ற விகிதாச்சாரத்திலான நிதியுதவியுடன் செயல்படுகிறது.

2018–2019ஆம் ஆண்டில் மொத்தம் 13 மாவட்ட அளவிலான பெண்கள் வள மையங்கள் கடலூர், சேலம், அரியலூர், தர்மபுரி, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, நாமக்கல், பெரம்பலூர் திருவண்ணாமலை, திருவள்ளூர், சென்னை, இராமநாதபுரம் மற்றும் விருநகர் ஆகிய மாவட்டங்களுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளன. 2019 –2020 ஆம் ஆண்டில் மீதமுள்ள 19 மாவட்டங்களில் மாவட்ட அளவிலான பெண்கள் வள மையம் துவக்குவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளன. வட்டார அளவிலான மகிளா சக்தி கேந்திரா திட்டத்தினை செயல்படுத்துவதற்கு விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய பின்தங்கிய மாவட்டங்களில் தலா 8 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.3.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.6.2 ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre)

மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய சிறப்பு திட்டமான 'சகி' என்ற ஒருங்கிணைந்த சேவை மையம் தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பத்தில், சமுதாயத்தில், பணிபுரியும் இடத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் திட்டமாகும். வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவையும், ஒருங்கிணைந்த சேவையாக தற்காலிக தங்கும் வசதி, மருத்துவ உதவி, சட்ட உதவி, துயரத்திலுள்ள பெண்களுக்கு மனநல ஆலோசனை வழங்குதல் போன்ற சேவைகளையும் ஒருங்கிணைந்த சேவை மையம் வழங்கி வருகிறது. இத்திட்டம் 100 சதவீகிதம் மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுகிறது. 2018–2019ஆம் ஆண்டில், 6 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2019–2020ஆம் ஆண்டில் மீதமுள்ள மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

2019–2020ஆம் நிதியாண்டில், இந்தியாவில் முதல் முறையாக சென்னை மாவட்டத்திற்கு இரண்டு கூடுதல் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று புதிய கட்டிடத்திலும்

மற்றொன்று ஏற்கனவே உள்ள கட்டிடத்திலும் செயல்படும். இம்மையங்கள் வாயிலாக கடந்த 2017 முதல் மே 2019 வரை மொத்தம் 1106 பயனாளிகள் தம் பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டுள்ளனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.527.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.6.3 மகளிர் உதவி எண்.181 (Women Help Line)

வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 24/7 மணி நேரமும், உடனடி உதவிகள் வழங்குவதற்கு மத்திய அரசால் குறுகிய குறியீடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மகளிர் உதவி எண்.181–ன் வாயிலாக அவசரகால அழைப்பை ஏற்பதே உலகலாவிய மகளிர் உதவி எண் திட்டத்தின் நோக்கமாகும்.

இம்மகளிர் உதவி எண் வாயிலாக பெண்களுக்கான அரசின் திட்டங்கள் குறித்த விவரங்களும் அளிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 100% மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் 10.12.2018 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது. இதனை செயல்படுத்த ரூ.1.55 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகளிர் உதவி எண் தற்போது அம்பத்தூர் தொழிற்பேட்டையிலுள்ள அம்மா அழைப்பு மையத்தில் செயல்பட்டு வருகிறது. 2019 மே மாதம் வரை மொத்தம் 1,36,241 அழைப்புகள் பெறப்பட்டுள்ளன. சம்மந்தப்பட்ட துறைகளின் உறுதுணையுடன் அனைத்து அழைப்புகளுக்கும் உடனடியாக தீர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.46.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.2.6.4 சமுதாய உதவி மையம்**

குழந்தைகள், பெண்கள், முதியோர், தவறாக பயன்படுத்தப்படுதல் மற்றும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறைதீர்வுகள் மற்றும் தேவையான தகவல்களை ஒற்றைச் சாளர முறையில் பெறுவதற்கு மாவட்ட அளவில் சமுதாய உதவி மையம் தொடங்கப்பட்டுள்ளது. சமுதாய உதவி மையம் மாநில அளவில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுகிறது. இத்திட்டம் பயனாளிகளுக்கு தகவல் அளிக்கவும் பயனாளிகளை பல்வேறு துறைகளுடன் விரைவாக இணைத்திடவும் உதவுகிறது. இம்மையத்தின் வாயிலாக 8 மாவட்டங்களில் நாளொன்றுக்கு 6 முறைகள் வீதம், 7 மாதங்களுக்கு தனியார் பண்பலை

வரிசை வானொலி நிலையங்களில், பல்வேறு நலத்திட்டங்கள் குறித்த வெவ்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு கிராமபுற மக்களுக்கு பிரசாரம் செய்யப்பட்டுள்ளது. சமுதாய உதவி மையத்திற்கென மேற்கொண்ட மொத்த செலவினத் தொகை ரூ.1.94 கோடி ஆகும்.

### 2.2.7 பெண்களுக்கான சமூக நலச் சட்டங்கள்

பெண்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதி செய்யும் பொருட்டு, சமூக நலத்துறை கீழ்காணும் சமூக நலச் சட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

1. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 மற்றும் அதன் விதிகள் 2006
2. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961
3. பணிபுரியும் இடங்களில், பாலியல் துன்புறுத்தலிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, விலக்கு மற்றும் குறைதீர்வு) சட்டம், 2013
4. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், 2015

### 2.2.7.1 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 'வன்முறை இல்லாத குடும்பத்தில் வசிக்க' பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. இச்சட்டம் பெண்கள் தங்கள் உரிமையோடு தங்கள் புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையையும், தன் குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தருவதை உறுதி செய்கிறது.

**இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- ❖ இச்சட்டம் உரிமையியல் (Civil) மற்றும் குற்றவியல் (Criminal) விதிமுறைகளை கொண்டிருப்பினும் உரிமையியல் சார்ந்த தீர்வுகளை 60 நாட்களுக்குள் விரைவாக பாதிக்கப்பட்ட பெண்கள் பெறமுடியும்.
- ❖ ஒரே வழக்கில் பல தீர்வுகளை தீர்ப்புகளை பெற இச்சட்டம் வழிவகை செய்துள்ளது
- ❖ குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தின் ஆணையினை எதிர்த்து 30 நாட்களுக்குள் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் மேல் முறையீடு செய்யலாம்.

**பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் சேவையளிப்பவர்கள்**

- ❖ பாதுகாப்பு அலுவலர் பெண்களுக்கு ஏற்படும் குடும்ப வன்முறை சம்பவ அறிக்கையை பாதிக்கப்பட்ட பெண் சார்பில் தாக்கல் செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ளார். மேலும் பாதிக்கப்பட்ட பெண்ணும் அருகிலுள்ள காவல் நிலையத்தில்

நேரிடையாக புகார் அளிக்கலாம். அல்லது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நேரிடையாக அறிக்கை தாக்கல் செய்யலாம். குடும்ப வன்முறை சம்பவ அறிக்கை தாக்கல் செய்யவும் குறுகிய கால தங்குமிடங்களில் தங்குவதற்கும், மருத்துவ வசதி, ஆலோசனை, திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் சட்ட உதவி போன்ற வசதிகளை பெறுவதற்கும் சேவை அளிப்பவர்களின் உதவியை பாதிக்கப்பட்ட பெண் பெறலாம்.

❖ குடும்ப வன்முறை சட்டம், 2005ன் கீழ் அந்த ஆண்டு முதல் மார்ச் 2019 வரை, 46829 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 27037 வழக்குகள் நீதிமன்றத்தின் வாயிலாக முடிக்கப்பட்டு, இதர வழக்குகள், மருத்துவ சிகிச்சை, ஆற்றுப்படுத்துதல், இலவச சட்ட உதவி ஆகியவற்றுக்கு பரிந்துரைக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் நிலுவையில் உள்ளன.

### 2.2.7.2 வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961

❖ வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961ஆம் ஆண்டு இயற்றப்பட்டதுடன் தமிழ்நாடு வரதட்சணை தடுப்பு விதிகள், 2004ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

❖ இச்சட்டமானது 1989ல் திருத்தம் செய்யப்பட்டு, வரதட்சணை தடுப்பு விதிகள், 2004ன் படி மாவட்ட சமூக நல அலுவலர்களை வரதட்சணை தடுப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- காவல்துறை மாவட்ட சமூகநல அலுவலரிடம் மெய்தன்மை அறிக்கை பெற்று வரதட்சணை வழக்குகளை தாக்கல் செய்கிறது.
- ஆண்டுதோறும் **நவம்பர் 26ஆம்** நாள் வரதட்சணை தடுப்பு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

**வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் (மார்ச் 2019 வரை)**

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட சமூக நல அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 8,921 |
| 2 | ஆற்றுப்படுத்துதல் மூலம் சுமூகமாக தீர்க்கப்பட்ட வழக்குகள் | 7,147 |
| 3 | மாவட்ட சமூக நல அலுவலரால் காவல் துறைக்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகள் | 1,289 |
| 4 | மாவட்ட சமூக நல அலுவலரின் விசாரணையில் உள்ள வழக்குகள் | 485 |

### 2.2.7.3 பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, விலக்கு மற்றும் குறைதீர்வு) சட்டம், 2013

2013ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு, பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, விலக்கு மற்றும் குறைதீர்வு) சட்டம், 2013ஐ செயல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின் பிரிவு 5இன் கீழ் மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

10 பணியாளர்களுக்கு மேலுள்ள அலுவலகங்களில் உள்ளக புகார் குழு (Internal Complaints Commitee) அமைக்கப்பட்டுள்ளது. 10 பணியாளர்களுக்கு குறைவாக உள்ள அலுவலக புகார்களுக்கு மாவட்டத்தின் உள்ளூர் புகார் குழு தீர்வு அளிக்கும். அக்குழுக்கள் மாவட்ட சமூக நல அலுவலர்களால் கண்காணிக்கப் படுகின்றன.

பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான துன்புறுத்தல் குறித்து இணையதளம் வாயிலாக புகார் பதிவு செய்ய, SHE-Box (Sexual Harassment Electronic Box) என்ற திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

### 2.2.7.4 தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்கு முறைப்படுத்தும்) சட்டம், 2014

வீட்டை விட்டு வெளியில் தங்கியுள்ள குழந்தைகள் மற்றும் பெண்கள் ஆகியோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், அவர்களுக்கு எதிரான வன்முறை செயல்களை தடுக்கவும், தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 2014 தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மகளிர் மற்றும்

குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) விதிகள், 2015, தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட்டுள்ளது. இவ்வில்லங்கள் மற்றும் விடுதிகளை பதிவு செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### 2.2.8. பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள்

தற்போதுள்ள சூழலில் பெண்கள் தங்கள் குடும்ப வருமானத்திற்கு பொருளாதார அளவில் பங்களிக்கும் பொருட்டு பணி நிமித்தமாக தங்கள் வீட்டை விட்டு வெளியே தங்க வேண்டிய நிலையில், அவர்களுக்கு குறைந்த வாடகையில் பாதுகாப்பான தங்கும் விடுதிகள் தேவையாகிறது. இப்பெண்களின் தேவையை பூர்த்தி செய்ய, தமிழகத்தில் 18 மாவட்டங்களில், 28 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள் நடத்தப்படுகின்றன.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.124.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.8.1 தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம்

நிறுவனங்கள் சட்டம், **2013**ன்படி, தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம்–சிறப்பு திட்ட சாதனமாக (Special Purpose Vehicle) கடந்த **2018–19**ஆம் நிதியாண்டில் உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனம் பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகளில் குழந்தைகள் காப்பகம், நவீன வசதிகளுடன் கூடிய சமையலறை, உடற்பயிற்சி கூடம், விருந்து அரங்குகள், நூலகம், மருத்துவ கூடம், **வை–பை (Wi-Fi)** வசதி ஆகியவற்றை உள்ளடக்கிய உள்கட்டமைப்பு ஏற்படுத்தி அவற்றை நிர்வகித்து பராமரிக்கும். இந்நிறுவனம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்தின் ரூ.1.00 கோடி (Tamil Nadu Infrastructure Fund Management Corporation Limited-TNIFMC) நிதியுதவியுடன் செயல்படும். சமூக நல ஆணையரகம் இதனை செயல்படுத்தும் ஒருங்கிணைப்பு முகமையாகும்.

இத்திட்டத்தின் நோக்கமானது வீட்டை விட்டு வெளியே பணிக்காக வரும் பெண்களுக்காக பாதுகாப்புடன் கூடிய மகிழ்ச்சியான தங்கும் விடுதிகளை குறைந்த வாடகை முதல் அதிக வாடகை அளவில் வெவ்வேறு வருவாய் பிரிவினருக்கும் ஏற்படுத்தி தருவதாகும்.

விடுதிகளை மேம்படுத்துதல், வடிவமைத்தல், கட்டுதல், புதுப்பித்தல், செப்பனிடுதல் போன்றவற்றை செய்வதே இதன் நோக்கமாகும்.

## 2.3 மூத்த குடிமக்கள் நலன்

மூத்த குடிமக்கள் பாதுகாப்பானதாகவும், மரியாதையுடன் கூடியதுமான வாழ்க்கை வாழ தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து, மூத்த குடிமக்கள் பயனடையும் வகையில் முதியோர் ஓய்வூதியம், முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாகங்கள், நடமாடும் மருத்துவ மையங்கள், பிசியோதெரஃபி கிளினிக் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்களை பல துறைகளுடன் இணைந்து சிறப்பாக செயல்படுத்துவதில் தமிழக அரசு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதரவற்ற முதியோர்கள் பயனடையும் வகையில் கீழ்காணும் ஏதேனும் ஒரு திட்டத்தில் முதியோர் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181

<table>
<tr><th>வ. எண்</th><th>திட்டத்தின் பெயர்</th><th>இல்லங்களின் எண்ணிக்கை</th><th>பயனாளிகளின் எண்ணிக்கை</th><th>செலவினம் (2018-19) (ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>முதியோர் இல்லங்கள்</td><td>20</td><td>679</td><td>97.34</td></tr>
<tr><td>2.</td><td>ஒருங்கிணைந்த வளாகங்கள்</td><td>48</td><td>முதியோர் – 1091<br>குழந்தைகள் – 1152</td><td>627.78</td></tr>
<tr><td rowspan="4">3.</td><td colspan="3">ஒருங்கிணைந்த மூத்த குடிமக்களுக்கான திட்டம்</td><td>மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்ட மானியம்</td></tr>
<tr><td>1. முதியோர் இல்லம்</td><td>65</td><td>1733</td><td rowspan="3">1446.75</td></tr>
<tr><td>2. நடமாடும் மருத்துவ மையம்</td><td>4</td><td>1602</td></tr>
<tr><td>3. பிசியோதெரஃபி கிளினிக்</td><td>3</td><td>150</td></tr>
</table>

முதியோர் இல்லங்களில் அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு, மருத்துவ வசதிகள் உள்ளிட்ட குறைந்தப்பட்ச தர நிலைகளை நிர்ணயம் செய்து **2016**ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டது.

### 2.3.1 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

மூத்த குடிமக்கள் நமது நாட்டின் விலைமதிப்பில்லா சொத்துக்கள். நாட்டின் வளர்ச்சிக்கான இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வரையறை செய்ப்பட்டுள்ளபடி மூத்த குடிமக்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பை உறுதி

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181

செய்யும் பொருட்டு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு அதற்கேற்ப விதிகளும் வகுக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்:**

- இச்சட்டத்தின் கீழ் பராமரிப்புத் தொகை கோரி பெறப்படும் மனுக்கள் 90 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும்.
- அதிகபட்ச பராமரிப்புத் தொகை ஒரு மாதத்திற்கு ரூ.10,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- மூத்த குடிமக்களின் பாதுகாப்பான பராமரிப்பிற்கு பொறுப்பான நபர், அம்மூத்த குடிமக்களை எங்காவது நிராதரவாக விட்டுச் சென்றால், அந்நபருக்கு 3 மாத சிறைத்தண்டனை அல்லது ரூ.5,000 வரை அபராதத் தொகை அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனைஅளிக்க வரையறை செய்யப்பட்டுள்ளது.

### 2.3.2. முதியோருக்கான குறை களைவு வழிமுறைகள்

மூத்தகுடிமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்வு செய்ய ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும், வருவாய் கோட்டாட்சியரைத் தலைவராகக் கொண்ட உட்கோட்ட தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முதியோர்களின் குறைகளை விரைந்து தீர்வு செய்வதற்கு

இம்மாநிலத்தில் 81 தீர்ப்பாயங்கள் செயல்படுகின்றன. தீர்ப்பாயத்தின் ஆணைக்கெதிராக மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவராகக் கொண்டு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட சமூக நல அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் பராமரிப்பு அலுவலர்களாகவும், சமரச அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். 2010 முதல் மார்ச் 2019 வரையில் 2,652 மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

**2.3.3. முதியோர் நலனுக்கான மாநில மற்றும் மாவட்டக்குழு**

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு நலச்சட்டம், 2007–னை சிறப்பாக செயல்படுத்தவும், ஆலோசனை வழங்கவும், கண்காணிக்கவும் மாநில அளவில் தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு 15 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல் சாரா உறுப்பினர்களையும் உள்ளடக்கிய ஓர் உயர் மட்ட ஆலோசனைக் குழுவான மாநில அளவிலான முதியோர் ஆலோசனைக் குழு ஒன்று திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்முதியோர் மாநில அளவிலான உயர் மட்ட ஆலோசனைக் குழுவிற்கான செயல்பாடுகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவை தெளிவாக குறிப்பிடப்பட்டு, தமிழ்நாடு பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நல விதிகள் **2009–ல்** தகுந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டு கடந்த **26.07.2018** அன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

### 2.3.4 முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு ஒருங்கிணைந்த வளாகங்கள்

முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளை ஒரே வளாகத்தில் தங்கும் விதத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக இந்த ஒருங்கிணைந்த வளாகங்களை கடந்த **2011–12**ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் மாநில அரசின் மானிய உதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகத்தில் **25** குழந்தைகள் மற்றும் **25** முதியோர்கள் தங்கும்படி செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சரின் அறிப்பின் கீழ், தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த வளாகங்களில் உள்ள

முதியோர்களுக்கு, உணவூட்டு மானியம் ரூ.653லிருந்து ரூ.1200 ஆகவும், குழந்தைகளுக்கு, ரூ.750லிருந்து ரூ.900 ஆகவும் 01.11.2018 முதல் உயர்த்தப்பட்டுள்ளன.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.750.58 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.5 மாநில அரசின் மானியம் பெற்று தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்

அதிகரித்து வரும் ஆதரவற்ற முதியோர்களின் எண்ணிக்கையினை கருத்திற்கொண்டு அவர்களின் நலன் காக்கும் விதமாக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் முதியோர் இல்லங்களுக்கு தமிழக அரசு மானிய உதவி அளித்து வருகிறது. ஒவ்வொரு முதியோர் இல்லத்திலும் 40 முதியோர்கள் தங்கி பயனடையலாம். முதியோர்களுக்கு உணவூட்டு மானியம் ரூ.300–லிருந்து ரூ.1200–ஆக 01.09.2016 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.117.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.6 மத்திய அரசு உதவி பெறும் நலத்திட்டங்கள் – ஒருங்கிணைந்த மூத்த குடிமக்களுக்கான திட்டங்கள் (IPSrC)

ஆதரவற்ற 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களை பாதுகாத்து பராமரிக்கும் விதமாக அவர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதி ஆகியவை அளித்து மத்திய அரசின் மானிய உதவியுடன் ஒருங்கிணைந்த மூத்த குடிமக்களுக்கான திட்டங்கள், முதியோர் இல்லங்கள், நரம்புத்தளர்ச்சி மற்றும் ஞாபக மறதியால் பாதிக்கப்பட்ட மூத்த குடிமக்களுக்கு இல்லங்கள், நடமாடும் மருத்துவ குழுக்கள், பிசியோதெரஃபி கிளினிக், மண்டல அளவிலான பயிற்சி மற்றும் வள மையங்கள் ஆகிய வகைகளில் செயல்பட்டு வருகின்றன.

### 2.3.7 சர்வதேச முதியோர் தினவிழா கொண்டாடுதல்

முதியோர்களின் சேவைகளை அங்கீகரிக்கவும் முதியோர் நலன் காக்கவும் ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை நிறைவேற்றும் பொருட்டு ஆண்டுதோறும் முதியோர் தினவிழா ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 1ஆம் தேதி தமிழக அரசால் மாநில மற்றும் மாவட்ட அளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவின் போது

முதியோர்களின் நலனுக்காக சேவை புரிந்த சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளர்கள் கௌரவிக்கப்படுகின்றனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.5.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.3.8 முதியோருக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம்**

முதியோரின் நலன் காக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின் படி, ஆண்டுதோறும் ஜுன் 15ஆம் தேதி முதியோருக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினமாக தமிழக அரசால் அனுசரிக்கப்படுகிறது. முதியோருக்கு ஏற்படும் பல்வேறு வன்கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு அனைத்து பள்ளி, கல்லூரி மற்றும் அரசு அலுவலகங்களிலும் உறுதி மொழி எடுக்கப்படுகிறது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.9. அரசு மானியம் பெறும் முதியோர் இல்லங்களில் வசிக்கும் முதியோருக்கு தடுப்பூசி மருந்துகள் அளித்தல்

அரசு மானியம் பெறும் முதியோர் இல்லங்களில் தங்கி பயனடையும் ஆதரவற்ற முதியோர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி நோய் தொற்றுகளிலிருந்து அவர்களை பாதுகாக்கும் பொருட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர்களுக்கு நிமோனியா நோய்க்கு எதிரான தடுப்பூசி மருந்து “PREVNAR-13” அளிப்பதற்கு தமிழக அரசால் ரூ.1.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **இத்திட்டம் இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில் முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டுள்ளது.**

இந்த தடுப்பூசிகளுக்கான மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு சுகாதார துறையின் மூலம் முதியோர்களுக்கு அளிக்கப்படுகிறது. அதன்படி, இத்தடுப்பூசி அளிக்கும் திட்டம் **12.12.2018** அன்று துவக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் **4133** முதியோர்கள் பயனடைந்துள்ளனர்.



இந்தியாவிலேயே முதன் முறையாக முதியோர்களுக்கு இலவச நிமோனியா தடுப்பு ஊசி போடும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

## 2.4 மூன்றாம் பாலினர் நலன்

தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட மூன்றாம் பாலினருக்கான நல வாரியமானது, மூன்றாம் பாலினர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், கல்வி உதவித் தொகை, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை அளித்து சமுதாயத்தில் அவர்களுக்கான அங்கீகாரத்தை ஏற்படுத்துகிறது. தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியமானது மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களின் தலைமையில் 11 அலுவல்சார் உறுப்பினர்களையும் மற்றும் 12 மூன்றாம் பாலினர்களை அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்டது.

சுயத்தொழில் செய்து தங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் குறிக்கோளுடன் காணப்படும் மூன்றாம் பாலினர்களுக்கு மானியமாக ரூ.20,000 வழங்கி, மளிகை கடை அமைத்தல், கறவை மாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல், காய்கறி வியாபாரம், துணி, கயிறு மற்றும் அரிசி போன்ற சிறு வியாபாரங்களை மேற்கொள்ள வழிவகை செய்கிறது.

அரசாணை (2ப) எண்.69, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.8 (2)) துறை, நாள்.26.09.2018–ன்படி, 2018–2019ஆம் நிதியாண்டு முதல் வழங்கப்பட்டு வந்த

மானியத் தொகையானது, ரூ.20,000லிருந்து ரூ.50,000ஆக உயர்த்தப்பட்டு 150 மூன்றாம் பாலினர் பயன்பெறும் வகையில் ரூ.75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அரசு வழங்கும் மாதாந்திர ஓய்வூதியமாகிய ரூ.1,000 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினருக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் 1,000 மூன்றாம் பாலினர் பயனடைகின்றனர்.

| | | |
|---|---|---|
| மூன்றாம் பாலினர் என கண்டறியப்பட்டவர்கள் | : | 5589 |
| அடையாள அட்டை பெற்றவர்கள் | : | 5073 |
| தையல் இயந்திரம் பெற்றவர்கள் | : | 144 |
| சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கி கடன் | : | 51 (441 மூன்றாம் பாலினர்) |
| தொகுப்பு வீடுகள் | : | 133 + 515 கு.மா.வா வீடுகள் |
| கல்வி உதவித் தொகை பெற்றவர்கள் | : | 9 (ரூ.2,35,030) |
| குடும்ப அட்டை பெற்றவர்கள் | : | 2039 |
| வீட்டுமனைப் பட்டா பெற்றவர்கள் | : | 1303 |
| மருத்துவ காப்பீட்டு அட்டை பெற்றவர்கள் | : | 1048 |

மூன்றாம் பாலினர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கு ஏதுவாக, அரசுப்பணிகளில் அவர்களை பணியமர்த்தி வருவதுடன், அவர்களுக்கான வேலைவாய்ப்புகளை பல்வேறு துறைகளில் கண்காணித்து செயல்படுத்திட சமூக நலத்துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181



**10.12.2018** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூன்றாம் பாலினர்களுக்கு சுய தொழில் செய்திட உயர்த்தப்பட்ட மானியம் ரூ.50,000 வழங்கினார்கள்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.5 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்**

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான மனுக்களை விசாரிக்கவும், பெண்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்திடவும் சட்ட ரீதியான அமைப்பான (Statutory Body) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் **1993**ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அரசாணை எண். **88,** சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட (சந3)த் துறை, நாள் **22.12.2017**ன் படி தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் வடிவமைக்கப்பட்டு தலைவர் மற்றும் **9** உறுப்பினர்களை கொண்டு **26.12.2017** முதல் இயங்கி வருகிறது. இவ்வாணையத்திற்கு ஓர் இணை இயக்குநர் பணியிடமும் உருவாக்கப்பட்டுள்ளது.

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை விசாரணை செய்து உடனடியாக தீர்வு காண இவ்வாணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாணையம் பெண்கள் தொடர்பான பிரச்சனைகளை ஆராய்ந்து உரிய தீர்வுகளை அரசுக்கு பரிந்துரைக்கிறது. இதை தவிர வரதட்சணை தடுப்புச் சட்டம், **1961,** குடும்ப

வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005, பணிபுரியும் இடங்களில் ஏற்படும் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம் 2013, பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டம், 2017 ஆகிய சட்டங்களை முறையாக செயல்படுத்தப்படுவதை இவ்வாணையம் உறுதி செய்கிறது.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்திற்கு பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற மனுக்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தீர்வு காணப்பட்டு வருகிறது.

மேலும், தேசிய மகளிர் ஆணையத்தின் உதவியோடு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் மாவட்டந்தோறும் பெண்களுக்கான சட்டவிழிப்புணர்வு முகாம்களை நடத்தி வருகிறது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.33.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.6 தமிழ்நாடு சமூக நல வாரியம்**

தமிழ்நாட்டில் **1954**ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்து வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காகவும், மாநில மற்றும் மத்திய சமூக நல வாரியங்களின் திட்டங்களையும் மாநில அரசின் திட்டங்களையும் நன்முறையில் செயல்படுத்துவதை கண்காணிக்கவும் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு சமூக நல வாரியம் ஒரு தலைவரையும் **15** அலுவல் மற்றும் **15** அலுவல் சாரா உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

தமிழ்நாடு சமூக நல வாரியம் ஆண்டுதோறும் ரூ.**10.00** இலட்சத்தினை சமூக சேவை ஆற்றிவரும் **200** தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தளவாட பொருட்கள் வாங்குவதற்கு ரூ.**5000** மானியமாக வழங்குகிறது. இந்த மானியம் **50:50** என்ற வீதத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பங்களிப்புடன் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் 1984 முதல் மத்திய சமூக நல வாரியம் வாயிலாக 57 குடும்ப நல மையங்களும், தமிழக அரசின் நிதி உதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவங்களின் மூலமாக 6 குடும்ப ஆலோசனை மையங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்கள், குடிப்பழக்கம், போதை பழக்கம் மற்றும் வரதட்சனை கொடுமை போன்றவற்றால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஆலோசனைகள் வழங்கி வருகிறது.

**2019–2020ஆம் நிதியாண்டிற்கு தமிழ்நாடு சமூக நல வாரியம் வாயிலாக செயல்படும் குடும்ப நல மையங்களுக்கு ரூ.7.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**மத்திய சமூக நல வாரியத்தின் மூலம் 2018–19ஆம் ஆண்டில் ரூ.182.40 இலட்சம் மானியமாக குடும்ப ஆலோசனை மையங்களுக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளின் எண்ணிக்கை 68,400 பேர்.**

## 2.7 மாநில விருதுகள்

### 2.7.1 அவ்வையார் விருது

ஔவையார் விருது சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட

பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் மிக சிறந்து விளங்கும் ஒரு மகளிருக்கு சர்வதேச மகளிர் தினம் மார்ச் 8ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. ஔவையார் விருது பெறுபவர் 8 கிராம் (22 காரட்) எடையுள்ள தங்கப்பதக்கம், ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலை, சால்வை மற்றும் சான்று ஆகியவை வழங்கி சிறப்பிக்கப்படுகிறார். 2018ஆம் ஆண்டு திருமதி. P.சின்னப்பிள்ளை பெருமாள், களஞ்சியம் இயக்க நிறுவனர், மதுரை அவர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

### 2.7.2 பெண்களுக்காக சிறந்த சேவை புரிந்த நிறுவனம் மற்றும் சிறந்த சமூக சேவகர் விருது

ஒவ்வொரு ஆண்டும், சுதந்திர தினத்தன்று, பெண்களுக்காக சிறப்பாக பணியாற்றிய சிறந்த சமூக சேவகி மற்றும் பெண்களுக்காக சிறப்பாக தொண்டாற்றிய சிறந்த நிறுவனத்திற்கு சுதந்திர தின விருது வழங்கப்படுகிறது. சிறந்த சமூக சேவகிக்கு 10 கிராம் எடையுள்ள 22 காரட் தங்கப்பதக்கம், சால்வை மற்றும் சான்று ஆகியவை வழங்கப்படுகின்றன. சிறந்த நிறுவனத்திற்கு ரூ.50,000 ரொக்கப் பரிசுடன் சால்வை மற்றும் தங்கப்பதக்கமும் வழங்கப்படுகின்றன. 2018ஆம் ஆண்டு பெண்களுக்கான

சிறந்த சேவை புரிந்த நிறுவனம் விருது பெற்றவர் River – The Power of Women, கீழ்பாக்கம், சென்னை மற்றும் சிறந்த சமூக சேவகர் விருது பெற்றவர் திரு.எம்.சிவக்குமார், The Indian Freedom Fighters Memorable Association, Coimbatore.

## அத்தியாயம் – 3

### 3.1 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம்

குழந்தைகள்தான் தேசத்தின் எதிர்காலம் என்பதாலும் பின்தங்கிய சூழ்நிலையில் வளர்ந்து வரும் குழந்தைகள் அறிவாற்றலுடன் கூடிய நாட்டின் குடிமகனாக வளர்ந்திட வழிவகுத்திட வேண்டும் என்று உணர்ந்ததாலும், அப்போதைய முதலமைச்சராக இருந்த டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் "சத்துணவுத் திட்டத்தை" 1982ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தை துவக்கியதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. குழந்தைகளின் கல்வி மேம்பட வேண்டும் என்பதுடன் பசி இதற்கு ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பது தான் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். 1991ஆம் ஆண்டில் இத்திட்டம், “புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்” என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 2013ஆம் ஆண்டில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் குழந்தைகளின் விருப்பத்திற்கேற்றவாறு சத்துணவில் வழங்கப்படும் உணவினை மாற்றியமைத்து, தற்போது 13 வகையான கலவை உணவு வகைகளுடன் மசாலா முட்டைகளும் வழங்கப்படுகிறது.

### 3.2 இத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள்

1. அனைவருக்கும் தொடக்கக் கல்வியினை உறுதி செய்திடும் பொருட்டு, பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் இடை நிற்றலை குறைத்தல்
2. போதிய உணவின்றி வாடும் குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துதல்
3. வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த குழந்தைகள் பள்ளிக்கு தொடர்ந்து வருவதை ஊக்கப்படுத்துதல் மற்றும் முறையான கல்வி பெற உதவுதல்.
4. வேலைவாய்ப்புகளை வழங்குவதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்.

### 3.3 திட்டத்தின் சிறப்புக் கூறுகள்

i) 5 முதல் 9 வயதிற்குட்பட்ட தொடக்கப்பள்ளி குழந்தைகள் மற்றும் 10 முதல் 15 வயது வரையிலான உயர் தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும், வாரத்திற்கு 5 நாட்கள் வீதம் ஆண்டிற்கு 220 நாட்கள், பள்ளி வளாகத்திற்குள்ளேயே, சூடான, ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் சமைத்து வழங்கப்படுகிறது.

ii) தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், தருமபுரி,

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181

கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் சென்னை ஆகிய 15 மாவட்டங்களில் உள்ள தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும், சூடான, ஊட்டச்சத்து மிக்க கலவை சாதம் வருடத்தில் 312 நாட்களுக்கு சமைத்து வழங்கப்படுகிறது.

iii) 1 முதல் 5ஆம் வகுப்பு வரை தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு 100 கிராம் என்ற அளவிலும் 6 முதல் 10ஆம் வகுப்பு வரை உயர் தொடக்கப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு 150 கிராம் என்ற அளவிலும் அரிசி பயன்படுத்தப்படுகிறது.

## 3.4 தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தின் கால முறை வளர்ச்சி

சத்துணவுத் திட்டமானது ஊரக பகுதிகளில் 2 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையங்களிலும், 5 முதல் 9 வயது வரையிலான குழந்தைகளுக்கு தொடக்கப்பள்ளிகளிலும் முதலில் துவங்கப்பட்டது. பின்னர் 15.09.1982 முதல்

நகர்ப்புறங்களுக்கும் அதன் தொடர்ச்சியாக 10 முதல் 15 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் 15.09.1984–ல் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

### 3.5 நிர்வாகக் கட்டுப்பாடு




2 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கான முன்பருவக் கல்வி சத்துணவு மையங்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநர் மற்றும் குழும இயக்குநரின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181

## 3.6. பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் பயனாளிகள் விவரம்– 2019–2020

| வ . எண் | நிலை | சத்துணவு மையங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தொடக்கப்பள்ளி (1 முதல் 5ம் வகுப்பு வரை) | 26,810 | 24,25,043 |
| 2 | உயர்தொடக்கப்பள்ளி (6 முதல் 8ம் வகுப்பு வரை) | 16,210 | 19,32,627 |
| 3 | 9, 10ஆம் வகுப்பு | | 6,22,135 |
| 4 | தேசிய குழந்தை தொழிலாளர் சிறப்பு பள்ளிகள் | 263 | 5,530 |
| | **மொத்தம்** | **43,283** | **49,85,335** |

## 3.7 சத்துணவுத் திட்டத்தின் அம்சங்கள் கலவை சாதம்

பல்வகை கலவை சாதம் வழங்கும் திட்டம் **15.08.2014** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பல்வகை உணவு வகைகளின் விவரம் பின்வருமாறு:–

| நாட்கள் | வழங்கப்பட்டு வரும் உணவு வகைகள் | |
|---|---|---|
| | முதல் மற்றும் மூன்றாம் வாரம் | இரண்டாவது மற்றும் நான்காவது வாரம் |
| திங்கட் கிழமை |  வெஜிடபிள் பிரியாணி + மிளகு முட்டை |  சாம்பார் சாதம் (பிஸிபேளாபாத்) + வெங்காயம் தக்காளி மசாலா முட்டை |
| செவ்வாய் கிழமை |  கருப்பு கொண்டைக் கடலை புலவு + தக்காளி மசாலா முட்டை |  மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபிள் சாதம் + மிளகு முட்டை |
| புதன் கிழமை |  தக்காளி சாதம் + மிளகு முட்டை |  புளி சாதம் +தக்காளி மசாலா முட்டை |
| வியாழக் கிழமை |  சாதம், சாம்பார்+ வேகவைத்த முட்டை |  எலுமிச்சை சாதம் + பாசிப் பயறு சுண்டல் + தக்காளி முட்டை |
| வெள்ளிக் கிழமை |  கருவேப்பிலை / கீரை சாதம், மசாலா முட்டை+ மிளகாய்பொடி தூவி வறுத்த உருளைக்கிழங்கு |  சாதம் + காய்கறியுடன் சாம்பார், வேக வைத்த முட்டை மற்றும் வறுத்த உருளைக்கிழங்கு |

- **சத்துணவில் முட்டை வழங்குதல்**

சத்துணவில் வழங்கப்படும் முட்டைகள் 46 கிராம் முதல் 52 கிராம் வரை எடையுள்ள அக்மார்க் ‘A’ தரத்தில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000ஐ பின்பற்றி கொள்முதல் செய்யப்படுகிறது.

- **பயறு வகைகள் – கொண்டைக்கடலை / பச்சைப்பயறு / உருளைக்கிழங்கு / வாழைப்பழம்**

வாரம் ஒரு முறை 20 கிராம் கருப்பு கொண்டைக்கடலை / பச்சைப்பயறு மற்றும் 20 கிராம் உருளைக்கிழங்கு வழங்கப்படுகிறது. முட்டை உண்ணாத பயனாளிகளுக்கு 100 கிராம் எடையிலான வாழைப்பழம், ரூ.3.50 செலவினத்தில் வழங்கப்படுகிறது.

- **சத்துணவில் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் சமையல் எண்ணெய்**

சத்துணவுத் திட்டத்தில் இரண்டு சத்துக்களால் செறிவூட்டப்பட்ட உப்பு மற்றும் பாமாலின் எண்ணெய் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**ஊட்டச்சத்து நெறிகள்**

| வ. எண் | நிலை | மத்திய அரசு நெறி முறைகள் | | மாநில அரசால் வழங்கப்படுவது | |
|---|---|---|---|---|---|
| | | கலோரி (கிலோ கலோரிகள்) | புரதம் (கிராம்) | கலோரி (கிலோ கலோரிகள்) | புரதம் (கிராம்) |
| 1. | தொடக்கப் பள்ளி | 450 | 12 | 557.00 | 18.92 |
| 2. | உயர் தொடக்கப்பள்ளி | 700 | 20 | 735.00 | 22.77 |
| 3. | 9, 10ஆம் வகுப்பு | --- | --- | 735.00 | 22.77 |

## 3.8 தேசிய மதிய உணவுத் திட்டம்

தொடக்கக் கல்விக்கான தேசிய ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டம் என்ற "தேசிய மதிய உணவுத் திட்டம்" மத்திய அரசால் **15.8.1995**ல் தொடங்கி **1997–98–**ல் தொடக்கப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டது. உயர்தொடக்கப் பள்ளிகளில் அக்டோபர் **2007–**ல் விரிவுபடுத்தப்பட்டது. உணவூட்டுச் செலவினம் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கான மதிப்பூதியம், மத்திய மாநில அரசுகளால் **60:40** என்ற விகித அடிப்படையில் பகிரப்படுகின்றன. அரிசிக்கான தொகை மற்றும் போக்குவரத்து செலவினத்துடன் மேலாண்மை, கண்காணிப்பு

மற்றும் மதிப்பீட்டு செலவினத்திற்கு மத்திய அரசால் 100% நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

### 3.9. உணவூட்டுச் செலவினம்

(நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூபாயில்)

| வகுப்பு | மதிய உணவு நெறிகள் (60:40) | மத்திய அரசு (60%) | மாநில அரசு (40%) | மாநில அரசின் கூடுதல் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தொடக்கப்பள்ளி (1 முதல் 5 ஆம் வகுப்பு வரை) | 4.48 | 2.69 | 1.79 | 2.38 | 6.86 |
| உயர் தொடக்கப் பள்ளி (6 முதல் 8 ஆம் வகுப்பு வரை) | 6.71 | 4.03 | 2.68 | 0.25 | 6.96 |
| 9, 10ஆம் வகுப்பு | 100 விழுக்காடு மாநில அரசின் பங்களிப்பு | | | | 8.53 |

### 3.10 உணவு பொருட்கள் மேலாண்மை

- சத்துணவு மையங்களுக்கு தேவையான உணவுப்பொருட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் ஒவ்வொரு மையத்திலும் வழங்கப்படுகிறது.
- தேவையான காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்களை அமைப்பாளர்கள் மூலம் உள்ளூரிலேயே வாங்கப்படுகிறது.

### 3.11 உட்கட்டமைப்பு வசதிகள்

உணவு சமைப்பதற்கும் மற்றும் உணவுப்பொருட்களை பாதுகாக்கவும் பள்ளி வளாகத்திற்குள்ளேயே வைப்பறையுடன் கூடிய சமையலறைகள் கட்டப்பட்டு, எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சத்துணவு சமைப்பதற்கு தேவையான பாத்திரங்களும் வாங்கி வழங்கப்பட்டுள்ளது.

### 3.12 கண்காணிப்பு அமைப்பு

- உணவின் தரம், அளவு, சமைத்தல் மற்றும் பரிமாறுதல் மாவட்ட / வட்டார அலுவலர்களால் ஆய்வு செய்யப்படுகிறது.
- சத்துணவு மையங்களின் கணக்குகள் கிராம சபைக் கூட்டத்தில் வைக்கப்படுகிறது.
- குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குவதற்கு முன்பாக, சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் உணவினை ருசிபார்த்து, பதிவு செய்யப்படுகிறது. தினசரி பயனாளிகளின் எண்ணிக்கை குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகிறது.
- உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் : அனைத்து சத்துணவு மையங்களும் உணவு பாதுகாப்பு மற்றும்

தரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் பொருட்டு ரூ.43.00 இலட்சம் செலவிடப்படுகிறது.

**3.13 குறை தீர்க்கும் முறை**

குழந்தைகள், பெற்றோர், ஆசிரியர் மற்றும் பொதுமக்கள் சத்துணவுத் திட்ட செயலாக்கம் தொடர்பான புகார் மற்றும் குறைகளை தெரிவிக்கலாம்

- கட்டணமில்லா தொலைபேசி எண் : 18004258971.
- இணைய வழி மின்னஞ்சல் – http://www.middaymealtn.gov.in ⟶ online complaint

**3.14 பயிற்சித் திட்டம்**

சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு உணவு பாதுகாப்பு, தீத்தடுப்பு, தன்சுத்தம் மற்றும் சுகாதாரமான சமையல் ஆகிய தலைப்புகளின் கீழ் பயிற்சி வழங்கப்படுகிறது. 2018–19ஆம் ஆண்டில் 7400 சமையலர்களுக்கும் சமையல் உதவியாளர்களுக்கும் ரூ. 18.28 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 3.15 பள்ளி சுகாதார திட்டம்

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை வாயிலாக அனைத்து பள்ளிகளிலும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. பொது சுகாதாரம், இரத்தசோகை, கண் மற்றும் பல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இரும்பு போலிக் அமிலம், குடற்புழு நீக்க மாத்திரைகள் ஆகியவை முகாமின் போது வழங்கப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் சுகாதார அட்டைகள் பராமரிக்கப்படுகின்றன.

### 3.16 சத்துணவுப் பணியாளர்களுக்கான சலுகைகள்

சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் என சத்துணவு மையத்திற்கு 3 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 500 பயனாளிகளுக்கு மேல் உள்ள சத்துணவு மையங்களுக்கு கூடுதலாக ஒரு சமையலரை நியமித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசின் விதிகளின்படி, ஒரு சத்துணவு மையத்திற்கு ஒரே ஒரு சமையல் உதவியாளர் பணியிடம் மாதம் ரூ.1000 தொகுப்பூதியத்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்டு மத்திய மாநில அரசுகள் 60:40 பங்களிப்பு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழ்நாடு அரசு, குழந்தைகளுக்கு தரமான, ஆரோக்கியமான, பாதுகாப்பான

மற்றும் சுவையான உணவு வழங்கும் பொருட்டு ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் மூன்று பணியாளர்கள் சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 7வது ஊதியக்குழு பரிந்துரையின் அடிப்படையில் சத்துணவுப் பணியாளர்களுக்கு சிறப்புக் காலமுறை ஊதியத்தில், ஆண்டு ஊதிய உயர்வு, அகவிலைப்படி மற்றும் இதர அரசு பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போல் பிற படிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

**ஒப்பளிக்கப்பட்ட சத்துணவுப் பணியாளர்கள்**

| வ. எண். | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் | ஊதிய விகிதம் (ரூ) |
|---|---|---|---|
| 1 | அமைப்பாளர் | 42,423 | 7,700–24,200 |
| 2 | சமையலர் | 42,852 | 4,100–12,500 |
| 3 | சமையல் உதவியாளர் | 42,855 | 3,000–9,000 |

சத்துணவுப் பணியாளர்கள், பணியிலிருந்து ஓய்வு பெறும் போது வழங்கப்பட்டு வந்த ஒட்டு மொத்த தொகையினை ரூ.60,000லிருந்து ரூ.1,00,000ஆகவும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ரூ.25,000லிருந்து ரூ.50,000ஆகவும் சிறப்பு மாதாந்திர ஓய்வூதிய தொகை ரூ.1500 லிருந்து ரூ.2000 ஆகவும் 01.10.2017 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**3.17 சிறப்பு முயற்சிகள்**

**செறிவூட்டுதல் –** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் தருமபுரி, மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக 9 வகையிலான நுண்ணூட்ட சத்துக்களுடன் கூடிய செறிவூட்டப்பட்ட அரிசி பயன்படுத்தப்பட உள்ளது. இதற்கென தமிழ்நாடு புதுமையான மற்றும் முன் முயற்சி (TANII) திட்டத்தில் ரூ.529.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**எடைக்கருவிகள் –** ரூ.185.76 இலட்சம் செலவினத்தில் சத்துணவு மையங்களுக்கு எடைக்கருவிகள் வழங்கப்படவுள்ளது.

**தகவல், கல்வி, தொடர்பு –** ரூ.64.80 இலட்சம் செலவினத்தில் அனைத்து சத்துணவு மையங்களுக்கும் சுவரொட்டிகள் மற்றும் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளது

**சுகாதார பேழைகள்–** மேலாடைகள், நகவெட்டி, கைக்குட்டைகள், துணியிலான தொப்பி, சோப்புகள் உள்ளடக்கிய சுகாதார பேழைகள் ரூ.1.73 கோடி செலவினத்தில் அனைத்து சத்துணவு மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**விருதுகள்** – சிறப்பாக பணியாற்றி வரும் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு மாவட்ட அளவில் தலா ரூ.5000 விருது வழங்கும் திட்டத்திற்கென ரூ.4.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.18 நிதி ஒதுக்கீடு**

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.1,794.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## அத்தியாயம் – 4

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சமுதாயம் தழுவிய உலகின் மிகப் பெரிய திட்டமாகும். 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்களின் ஊட்டச்சத்தின் மீது சிறப்புக் கவனம் செலுத்தி முன்னேற்றுவதில் தமிழகத்திற்கு நீண்ட வரலாறு உண்டு. தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களின் வாயிலாக குழந்தைகள், வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் தாய்மார்களது ஊட்டச்சத்து, முன்பருவக்கல்வி, சுகாதாரம் மற்றும் தன்சுத்தம் குறித்து குறிப்பிடத்தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் நோக்கம், வாழ்க்கை சுழற்சி அணுகு முறையினைப் (Life Cycle Approach) பின்பற்றி இடர்பாடான நிகழ்வுகளில் பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலை மேம்பாடு அடைய தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்வதேயாகும். தமிழ்நாட்டை “ஊட்டச்சத்து குறைபாடற்ற” மாநிலமாக மாற்றுவதே இத்திட்டத்தின் பிரதான கொள்கையாகும்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் அண்ணல் காந்தியடிகளை போற்றும் வண்ணம் அன்னாரது 106வது பிறந்தநாளில் 1975ஆம் ஆண்டு இந்தியா முழுமைக்கும் 33 திட்டங்கள் மூலம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சென்னை (நகர்புறம்), நிலக்கோட்டை (கிராமப்புறம்) மற்றும் தளி (மலைவாழ்) திட்டம் என 3 திட்டங்கள் துவங்கப்பட்டது. தற்பொழுது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 4.1 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் குறிக்கோள்கள்

i. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முழுமையான உடல், மன, அறிவு மற்றும் மன எழுச்சி வளர்ச்சி கிடைக்கச்செய்தல்.

ii. மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு, குழந்தைநேயம், அதிக கவனத்துடன் சரியான ஆரம்ப கால பராமரிப்பு, வளர்ச்சி மற்றும் கற்றல்

iii. ஆண்–பெண் சமநிலையை மேம்படுத்தும் குடும்பம், வளரிளம் பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திட்டங்களை செயல்படுத்துதல்.

## 4.2 தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் அமைப்பு

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

↓

மாநில ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்)

↓

மாவட்ட திட்ட அலுவலகம் – 32 மாவட்டங்கள்

↓

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் – 434 திட்டங்கள் (385 ஊரகம், 47 நகர்புறம், 2 மலைவாழ் )

↓

அங்கன்வாடி மையங்கள் 54,439 (முதன்மை மையங்கள்=49,499 மற்றும் குறு மையங்கள் = 4,940)

## 4.3 வழிமுறைகள்

- அனைத்து நிலைகளிலும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளை நெறிப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பலப்படுத்துதல்.
- பயிற்சியின் வாயிலாக களப்பணியாளர்களின் செயல்திறனை அதிகரித்தல்.
- சுகாதாரம், ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் கல்வித் துறைகளுக்கு இடையேயான சரியான ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.
- ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் தன்சுத்தம் ஆகியவற்றில் பங்களிப்பையும், சமுதாய

விழிப்புணர்வை அனைத்து நிலைகளிலும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகள் மூலம் (IEC) மேம்படுத்துதல்.

- தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயனாளிகளின் தகவல் தளம் மற்றும் அறிவு சார் தளத்தை அமைத்தல்.

### 4.4 ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

2017ஆம் ஆண்டில் தேசிய ஊட்டச்சத்து குழுமம், பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY) போன்ற திட்டங்களை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டக் குடையின்கீழ் (Umbrella ICDS) கொணர்ந்துள்ளது. தற்போது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டக் குடையின்கீழ் கீழ்காணும் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன:–

1. அங்கன்வாடி பணிகள்
2. வளரிளம் பெண்களுக்கான திட்டம்
3. குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்
4. தேசிய குழந்தைகள் காப்பக திட்டம்
5. தேசிய ஊட்டச்சத்துக் குழுமம்
6. பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டம் – (2018–2019ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது).

## 4.5 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தினைப் பரவலாக்குதல் – புதிய மையங்கள் அமைத்தல்

இந்தியா முழுவதுமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தினை பரவலாக்கவும், 14 இலட்சம் அங்கன்வாடி மையங்களை (குழந்தைகள் மையங்களை) செயல்படுத்தவும், மத்திய அமைச்சக கூட்டுக் குழு சிறப்பு பணி பிரிவின் பரிந்துரையின் பேரில், மத்திய அரசு புதிய மையங்களை உருவாக்க வழி முறைகளைத் திருத்தி அமைத்துள்ளது.

திருத்தியமைக்கப்பட்ட வழிமுறைகளின்படி குழந்தைகள் மையம் அமைப்பதற்கான மக்கள் தொகை அளவுகோல் விவரங்கள்

| திட்டப் பகுதியின் வகைப்பாடு | முதன்மை மையம் | | குறு மையம் | |
|---|---|---|---|---|
| | குறைந்த பட்ச மக்கள் தொகை | அதிக பட்ச மக்கள் தொகை | குறைந்த பட்ச மக்கள் தொகை | அதிக பட்ச மக்கள் தொகை |
| ஊரகப்பகுதி | 400 | 800 | 150 | 400 |
| நகர்ப்புறம் | 400 | 800 | 150 | 400 |
| மலைப்பகுதி | 300 | 800 | 150 | 300 |

தமிழ்நாட்டில் **49,499** முதன்மை அங்கன்வாடி மையங்கள் மற்றும் **4,940** குறு மையங்கள் என மொத்தம் **54,439** அங்கன்வாடி மையங்கள் **434** திட்டங்களின் மூலம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் செயல்பட்டு வருகிறது. இதில் **385** கிராமப்புற திட்டங்கள், **47** நகர்புறத் திட்டங்கள் மற்றும் **2** மலைவாழ் திட்டங்கள் அடங்கும். பிறந்தது முதல் **72** மாதம் முடிய உள்ள குழந்தைகள், வளரிளம் பெண்கள் **(11–14** வயதுடைய பள்ளி செல்லா பெண்கள்), கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பயனாளிகள் ஆவார்கள்.

## 4.6 நிதி ஒதுக்கீடு

**2019–2020ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட செயல்பாட்டிற்கென ரூ.2,236.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.7 இணை உணவு

தமிழ்நாடு பல்வேறு ஊட்டச்சத்து திட்டங்களைச் செயல்படுத்தி குழந்தைகள் வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கிடையே

**“ஊட்டச்சத்து குறைபாடில்லா மாநிலம்”** என்ற நிலையை அடைவதற்கு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. அங்கன்வாடி பயனாளிகள் அன்றாடம் உட்கொள்ளும் உணவு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட உணவு இவற்றிற்கு இடையே ஏற்படும் சக்தி மற்றும் புரதச்சத்து குறைபாட்டினைச் சரிசெய்ய ஏதுவாக கீழ்காணும் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 4.7.1 ஊட்டச்சத்து மாவு

6 மாதம் முதல் 60 மாதம் முடிய உள்ள குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 11 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட பள்ளி செல்லா வளரிளம் பெண்களின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்திட ஊட்டச்சத்து மாவு வழங்கப்படுகிறது.

ஊட்டச்சத்து மாவில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துக்களை மேம்படுத்திடவும், ஊட்டச்சத்து மாவின் சுவைதனை அதிகரிக்கவும், ஊட்டச்சத்து மாவின் கலவையில் மாற்றம் செய்திட வல்லுநர் குழு, 2018ஆம் ஆண்டு அரசினால் அமைக்கப்பட்டது. அக்குழுவுடன் பல்வேறு நிலைகளில் மேற்கொண்ட விரிவான விவாதம் மற்றும்

கலந்துரையாடல்களுக்குப்பின் இருவேறு விதமான ஊட்டச்சத்து மாவுக் கலவை உயர்மட்ட குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டு, புதிய கலவை 10 மாவட்டங்களில் பரிசோதிக்கப்பட்டது. இப்பரிசோதனைக்கு பின்னர் பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும் களப்பணியாளர்களின் பரிந்துரையின் பேரிலும் புதிய ஊட்டச்சத்து மாவு 2019ஆம் ஆண்டு மே மாதம் முதல் மாநிலம் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

ஊட்டச்சத்துமாவில் அடங்கியுள்ள மூலப் பொருட்கள் :

| வ.எண் | மூலப் பொருட்கள் (100 கிராமில்) | விகிதம் |
|---|---|---|
| 1 | கோதுமை மாவு | 45.50 |
| 2 | முளைகட்டிய கேழ்வரகு மாவு | 5.00 |
| 3 | கொழுப்பு நீக்கப்படாத சோயா மாவு | 10.50 |
| 4 | வெல்லம் | 27.00 |
| 5 | வறுத்த கேழ்வரகு மாவு | 6.00 |
| 6 | செறிவூட்டப்பட்ட எண்ணெய் (Palm Oil) | 5.00 |
| 7 | வைட்டமின் (ம) தாதுக்கள் கலவை | 1.00 |
| | மொத்தம் | 100.00 |

## 4.7.2 வார உணவு அட்டவணை

| வயது | வழங்கப்படும் உணவு | இணைஉணவு/சத்துணவு வழங்கப்படும் அளவு மற்றும் செலவினம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 6 மாதம் முதல் 1 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 125கிராம் இணை உணவு மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 200 கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது. | 3,96,609 |
| 1 முதல் 2 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு + வாரத்திற்கு ஒரு வேக வைத்த முட்டை (புதன் கிழமை) | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 125 கிராம் இணை உணவு மற்றும் கடும் எடைக் குறைவுடைய குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 200 கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது | 6,75,826 |
| 2 முதல் 3 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு + சத்துணவு + 20கிராம் கருப்பு கொண்டைகடலை அல்லது பச்சைப்பயறு (செவ்வாய் கிழமைகளில்) + வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக் கிழமை) + வாரத்திற்கு 3 வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழன்) முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 100 கிராம் இணை உணவு மற்றும் கடும் எடைக் குறைவான குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 165 கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது. | 7,18,396 |

| | | | |
|---|---|---|---|
| 3 முதல் 5 வயதுடைய குழந்தைகள் | இணை உணவு + சத்துணவு + 20 கிராம் கருப்பு கொண்டைக்கடலை அல்லது பச்சைப்பயறு (செவ்வாய் கிழமைகளில்) + வேகவைத்த உருளைக் கிழங்கு (வெள்ளிக்கிழமை) + வாரத்திற்கு 3 வேக வைத்த முட்டைகள் (திங்கள், புதன், வியாழன்) முட்டை உண்ணாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் | இயல்பான மற்றும் மிதமான எடையுடைய குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 10 கிராம் இணை உணவு மற்றும் கடும் எடைக் குறைவான குழந்தை களுக்கு நாளொன்றுக்கு 100 கிராம் இணை உணவு வழங்கப்படுகிறது. | 6,65,401 |
| | | மொத்தக் குழந்தைகள் | 24,56,232 |
| கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | இணை உணவு | நாளொன்றுக்கு 165 கிராம் | 7,37,277 |
| வளரிளம் பெண்கள் (11–14 பள்ளி செல்லா பெண்கள் மட்டும்) | இணை உணவு | நாளொன்றுக்கு 165 கிராம் | 1648 |
| | மொத்தம் | | 31,95,157 |

### 4.8 அங்கன்வாடி மையங்களுக்கு வரும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பல்வேறு வகையான கலவை சாதம் (2 முதல் 5+ வயதுடைய குழந்தைகள்)

அங்கன்வாடி மையங்களுக்கு வரும் 5+ வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, அவர்களின் ஜீரண சக்தி மற்றும் சிறப்பு ஊட்டச்சத்துத் தேவைகளைக் கருத்தில் கொண்டு பிரபல ஊட்டச்சத்து நிபுணர்களின் ஆலோசனை

பெற்று பல்வேறு வகையான கலவை சாத வகைகள் **20.03.2013** முதல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் அதனுடைய வரவேற்பினைத் தொடர்ந்து, **15.08.2014** முதல் மாநிலத்தின் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

| **கிழமை** | **உணவு வகைகள்** |
|---|---|
| திங்கள் | தக்காளி சாதம் + வேகவைத்த முட்டை |
| செவ்வாய் | கலவை சாதம் + வேகவைத்த கருப்பு கொண்டைக்கடலை (அ) வேகவைத்த பச்சைப் பயறு |
| புதன் | காய்கறி புலவு + வேகவைத்த முட்டை |
| வியாழன் | எலுமிச்சை சாதம் + வேகவைத்த முட்டை |
| வெள்ளி | பருப்பு சாதம் + வேகவைத்த உருளைக் கிழங்கு |
| சனி | கலவை சாதம் |
| ஞாயிறு | வீட்டிற்கு எடுத்து செல்லும் வகையில் உலர் உணவுப் பொருட்கள் |

கலவை சாதத்திற்கான உணவூட்டுச் செலவினம் பருப்பு பயன்படுத்தும் நாட்களில் ரூ.**1.13** எனவும், பருப்பு பயன்படுத்தாத நாட்களில் ரூ.**1.35** எனவும், வழங்கப்பட்டு வருகிறது.

### 4.9 செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்கள்

- தமிழ்நாட்டில் 1991ஆம் ஆண்டிலிருந்து மதிய உணவுத் திட்டத்திற்கு இரும்புச்சத்து மற்றும் அயோடின் கலந்த உப்பு தமிழ்நாடு அரசு உப்புக் கழகம் மூலமாக வழங்கப்படுகிறது. தற்பொழுது தமிழ்நாட்டில் அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் இரும்புச் சத்து மற்றும் அயோடின் கலந்த (Double Fortified Salt) உப்பு வழங்கப்பட்டு வருகிறது.
- வைட்டமின் A மற்றும் வைட்டமின் D சத்துக்கள் செறிவூட்டப்பட்ட பனை எண்ணெய் (Palmolein Oil) அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கப்படுகிறது.
- இணை உணவு மாவில் ஊட்டச்சத்தினை அதிகப்படுத்துவதற்கு நுண் ஊட்டச்சத்துக்கள் மற்றும் வைட்டமின்கள் சேர்க்கப்படுகிறது.
- நுண் ஊட்டச்சத்து குறைபாட்டினை களையும் விதத்தில் முன்னோடித் திட்டமாக 9 நுண் ஊட்டச்சத்துக்கள் (வைட்டமின் A, B1, B2, B3, B6,

B12, போலிக் அமிலம், இரும்புச் சத்து மற்றும் துத்தநாக சத்து) அடங்கிய செறிவூட்டப்பட்ட அரிசியினை தர்மபுரி, மதுரை, தூத்துக்குடி, தஞ்சாவூர், மற்றும் நீலகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களில் விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

### 4.9.1 உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலை அதிகார அமைப்பில் அங்கன்வாடி மையங்களை பதிவு செய்தல்

நடைமுறையில் உள்ள இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச் சட்டம் **2006**ன்கீழ் (Food Safety and Standard Act 2006) அனைத்து அங்கன்வாடி மையங்களும் உணவு பாதுகாப்பு துறையால் பதிவு செய்யப்பட்டு ஆண்டுதோறும் பதிவுச் சான்றுகள் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

### 4.10 தேசிய ஊட்டச்சத்து குழுமம் (போஷன் அபியான்)

**2017–2018**ஆம் ஆண்டிலிருந்து, அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் இந்தியாவில், **6** வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை முன்னேற்றுவதற்கான

குறிக்கோளுடன் தேசிய ஊட்டச்சத்து குழுமத்தை (POSHAN Abhiyaan) மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் இத்திட்டம் முதற்கட்டமாக மார்ச் 2018ல், 5 மாவட்டங்களிலும், இரண்டாம் கட்டமாக செப்டம்பர் 2018ல், 6 மாவட்டங்களிலும் மூன்றாம் கட்டமாக டிசம்பர் 2018 முதல் எஞ்சியுள்ள 21 மாவட்டங்களிலும் மத்திய மாநில அரசுகளின் நிதி பங்களிப்பு முறையே 80 : 20 என்ற விகிதாசார அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய ஊட்டச்சத்து குழுமத்தின் இலக்குகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண் | நோக்கங்கள் | இலக்கு |
|---|---|---|
| 1. | பிறந்தது முதல் 6 வயது குழந்தைகளிடையே குள்ளத் தன்மையை குறைத்தல் மற்றும் தடுத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 2 சதவிகிதம் வீதம் 6 சதவிகிதம் குறைத்தல் |
| 2. | பிறந்தது முதல் 6 வயது குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு (எடைகுறைவு) குறைத்தல் மற்றும் தடுத்தல். | ஒவ்வொரு ஆண்டும் 2 சதவிகிதம் வீதம் 6 சதவிகிதம் குறைத்தல் |
| 3. | 6 முதல் 59 மாதங்கள் வயதுடைய பச்சிளங் குழந்தைகளிடையே இரத்தசோகை தாக்கத்தினை குறைத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 3 சதவிகிதம் வீதம் 9 சதவிகிதம் குறைத்தல் |
| 4. | 15 முதல் 49 வயதில் உள்ள வளரிளம் பெண்கள் மற்றும் தாய்மார்களிடையே இரத்த சோகை தாக்கத்தினை குறைத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 3 சதவிகிதம் வீதம் 9 சதவிகிதம் குறைத்தல் |
| 5. | குறைந்த எடையுடன் குழந்தைகள் பிறப்பதை குறைத்தல் | ஒவ்வொரு ஆண்டும் 2 சதவிகிதம் வீதம் 6 சதவிகிதம் குறைத்தல் |

போஷன் அபியான் திட்டத்தினை செயல்படுத்திட மற்றும் அதன் இலக்குகளை அடைய, மாநில திட்ட மேலாண்மை பிரிவு (**State Project Management Unit**) அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் முழுமையாக செயல்படவும் மக்களிடையே ஊட்டச்சத்து குறைபாட்டினை எதிர்கொள்ளவும் இப்பிரிவு மாநில ஊட்டச்சத்து வள மையமாக செயல்பட்டு வருகிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான உதவிமையம் மாநில திட்ட மேலாண்மை பிரிவிற்கு உதவிசெய்கிறது.

குறித்த நேரத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்த மற்றும் திறன்பட கண்காணிக்க, பல்வேறு கூறுகளாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.


**அ) அங்கன்வாடி பணியாளர்களுக்கு திறன்பேசி (Smart Phone) வழங்குதல்**

முழு நேர திட்ட கண்காணிப்பிற்காக அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு திறன்பேசி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் **20,150** திறன்பேசிகள் (Smart phones) **1**ஆம் கட்ட மற்றும் **2**ஆம் கட்ட மாவட்டத்தில் உள்ள அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும்

எஞ்சியுள்ள 21 மாவட்டங்களிலுள்ள அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு 39,338 திறன்பேசிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுவான மென்பொருள் பயன்பாடு (ICDS – Common Application Software) மூலம் திறன்பேசி செயலி வழியாக அங்கன்வாடி பணியாளர் பயன்படுத்தும் 11 பதிவேடுகளில் 10 பதிவேடுகள் எண்முறை படுத்தப்பட்டு (Digitize) பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலையினை தொடர் கண்காணிப்பு மூலமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. திறன்பேசி அங்கன்வாடி பணியாளர்களின் பணிச்சுமையை குறைத்து அவர்கள் பணியை திறம்பட செய்ய வழிவகுக்கிறது. மேலும், இதற்கான பயிற்சிகளும் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181





திறன்பேசி (Smart Phone) மூலமாக அங்கன்வாடி பயனாளிகளின் ஊட்டச்சத்து நிலை தொடர் கண்காணிப்பு செய்யப்படுதல்

**ஆ) அங்கன்வாடி மையங்களுக்கு வளர்ச்சிக் கண்காணிப்பு உபகரணங்கள் வழங்குதல்**

போஷன் அபியான் திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எடை மற்றும் அவர்களின் உயரம் கண்டறிந்து குழந்தைகளிடையே காணப்படும் குள்ளத்தன்மை, உடல் மெலிவு, எடை குறைவு, ஆகியவற்றை குறைத்திட பின் வரும் வளர்ச்சிக் கண்காணிப்பு சாதனங்கள் அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அவை சிறுகுழந்தைகளின் நீளத்தை அளவிடும் கருவி (Infantometer) குழந்தைகளின் உயரத்தைஅளவிடும் கருவி (Stadiometer), தாய் மற்றும் குழந்தை எடை எடுக்கும் கருவி (Adult/Baby Digital Weighing scale), மற்றும் சால்டர் எடை கருவிகள் (Salter scale) ஆகும். முதற்கட்ட மற்றும் இரண்டாம் கட்ட 11 மாவட்டங்களில் 18,573 அங்கன்வாடி மையங்களுக்கு வளர்ச்சி கண்காணிப்பு சாதனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. மேலும் எஞ்சியுள்ள 21 மாவட்டங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு 35,866 வளர்ச்சிக் கண்காணிப்பு சாதனங்கள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில / மாவட்ட / வட்டார திட்ட குழு அமைக்கப்பட்டு சமூகத்திற்கான நலத்திட்டங்களை உறுதிப்படுத்துவதற்காக அதன் தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்திட செயல்படுத்தப்படுகிறது. இக்குழுவானது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி திட்ட செயல்பாட்டினை மேம்படுத்திட நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

### 4.11 அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் மருந்து பெட்டிகள் மற்றும் சுகாதாரப் பெட்டிகள் வழங்குதல்

அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் மருந்து பெட்டிகள் தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் மூலம் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இம்மருந்துகள் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, சிராய்ப்பு, தோல் நோய் போன்ற சிறுநோய்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி பணியாளர்கள் மருந்தை கையாளும் திறன் பயிற்சி பெற்றுள்ளனர். உயர் சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிந்துரைக்கப் படுகின்றனர்.

மேலும், அங்கன்வாடி மையத்திற்கு வரும் குழந்தைகளின் சுத்தம் மேம்படுத்தப்படும் வகையிலும் மற்றும் அவர்களது வளரும் பருவத்திலேயே சுத்தம் பேணுதலை கற்பிக்கும் வகையிலும் மருந்து பெட்டிகளுடன் கூடுதலாக நகவெட்டி, சீப்பு சோப்பு மற்றும் கைத்துண்டுகள் அடங்கிய சுகாதாரப் பெட்டிகளும் வழங்கப்படுகின்றன.

### 4.12 ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE)

ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி (Early Childhood Care and Education) என்பது அங்கன்வாடி மையங்களை எழுச்சியூட்டும் மையங்களாக மாற்றி, விளையாட்டு மற்றும் கற்றலினை தினசரி 4 மணிநேரத்திற்கு திட்டமிட்ட செயல்பாடுகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

தேசிய ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக் கொள்கை, **2013**–ன் அடிப்படையில் தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மூலம் மாநில தேவைக்கேற்ப, குழந்தைகளின் வயது வளர்ச்சிக்கேற்ற வகையில் சூழ்நிலைக்கு உகந்த **“ஆடிப்பாடி விளையாடு பாப்பா”** என்ற புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, அது மத்திய அரசாலும் அங்கீகரிக்கப்பட்டு, அங்கன்வாடி மையங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தேவையான

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181

கற்றல் உபகரணங்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கான ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு கல்விக்கான பாடத்திட்டப் புத்தகங்கள், குழந்தைகளுக்கான செயல்பாட்டு புத்தகங்கள் ஆய்வுத் தாள்கள் ஆகியவை அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அங்கன்வாடிப் பணியாளர்கள் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கவனிப்பு மற்றும் ஆரம்பகால கற்றலுக்கான வாய்ப்புகளை வழங்கிடும் வகையில், மூன்றடுக்கு முறையில் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 4.12.1 மான்டிசோரி முறையில் அங்கன்வாடி மையங்களில் LKG / UKG வகுப்புகள் துவங்குதல்

பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையங்களுக்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் பொருட்டு, முதல் கட்டமாக **32** மாவட்டங்களிலும் உள்ள அரசு நடுநிலைப் பள்ளி வளாகங்களில் இயங்கும் **2,381** அங்கன்வாடி மையங்களில் மான்டிசோரி அடிப்படையில் LKG/UKG வகுப்புகளை முன்னோடித்திட்டமாக, பள்ளிக்

கல்வித்துறையின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், அரசு பள்ளிகளில் குழந்தைகளின் சேர்க்கையினை அதிகரிக்க, குழந்தைகளின் ஆரம்பநிலை கல்வி, கற்கும் திறன் மற்றும் ஆங்கில மொழியில் பேசவும் மற்றும் எழுதும் திறனை வளர்க்கவும், பெற்றோரின் நிதிச்சுமையை குறைக்கவும் உதவும்.

இத்திட்டத்திற்காக **2018–2019**ல் ரூ.**7.73** கோடி செலவில் சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் பள்ளிக் கல்வித்துறை இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.13 அங்கன்வாடி குழந்தைகளுக்கு வண்ணச் சீருடைகள்**

அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் குழந்தைகளின் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அங்கன்வாடி மையத்திற்கு தவறாது அனுப்பிட ஊக்குவிக்கும் பொருட்டு, ஒரு குழந்தைக்கு ரூ.**262.50** மதிப்பில் இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்கும் திட்டம் சென்னை, வேலூர், தேனி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், நாகப்பட்டினம், மற்றும் திருநெல்வேலி

ஆகிய 10 மாவட்டங்களில் மாநில நிதியினை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 3.80 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.9.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**4.14 அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்**

ஒவ்வொரு அங்கன்வாடி மைய கட்டடமும் நல்ல ஸ்திர தன்மையுடன் இருத்தலையும், குழந்தைகளுக்கேற்ற உட்கட்டமைப்பு வசதிகளான குழந்தைகளுக்கென தனியாக ஒரு அறையும், சமைப்பதற்கென தனியாக ஒரு அறையும், உணவு பொருட்களை பாதுகாப்பான முறையில் வைத்திட பாதுகாப்பு அறையும், குழந்தை நேய கழிப்பிடமும் மற்றும் விளையாடுவதற்கான காலி இடமும் இருப்பதை உறுதி செய்வதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மொத்தம் 1500 முதல் 2000 சதுர அடியில் பரப்பளவு உள்ள நிலத்தில் குறைந்த பட்சம் 600 சதுர அடியில் ஒரு அங்கன்வாடி மையம் கட்டப்பட்டு வருகிறது.





அங்கன்வாடி மையங்கள்

அங்கன்வாடி மைய கட்டடம் கட்டும் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினரால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் ஒருங்கிணைப்பு மூலம், **2016–2017, 2017–2018** மற்றும் **2018–2019** ஆகிய மூன்று ஆண்டுகளில், **3,000** அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.**60.00** கோடி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் பங்களிப்பாக வழங்கப்பட்டு புதிய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

**4.15 அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்குதல்**

அங்கன்வாடி மையங்களில் புகையில்லா சூழ்நிலையினை உருவாக்கிடும் பொருட்டு, ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திற்கும் எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு, பிரஷர் குக்கர் மற்றும் சமையல் மேடை அமைத்தல் ஆகிய பணிகள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியினை பயன்படுத்தி நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் **52,628** அங்கன்வாடி மையங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

**4.16 அங்கன்வாடி மையங்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்துதல்**

அனைத்து மையங்களும் குடிநீர் வசதியுடன் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், 2018–2019ஆம் ஆண்டில், 1,132 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.1.13 கோடி செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**4.17 அங்கன்வாடி மையங்களில் குழந்தைகள் நேயக் கழிவறை கட்டுதல்**

குழந்தைகளிடையே கழிவறை வசதியினை பயன்படுத்துவதை ஊக்குவிக்க, அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் குழந்தை நேய கழிவறை வசதி ஏற்படுத்த 2018–2019ஆம் ஆண்டில் 1,452 குழந்தை நேய கழிவறைகள் கட்டுவதற்கு ரூ.1.74 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினருடன் இணைந்து கழிவறை கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.18 சிறிய மற்றும் பெரிய அளவிலான பழுதுகளை நீக்கி அங்கன்வாடி மையத்தின் தரத்தினை மேலும் உயர்த்துதல்**

அரசு கட்டடங்களில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையங்களின் தரத்தினை உயர்த்தும் பொருட்டு, 2018–2019ஆம் ஆண்டில் மையம் ஒன்றிற்கு ரூ.2.00 இலட்சம்

வீதம் 1,260 அங்கன்வாடி மையங்களில் மொத்தம் ரூ.25.20 கோடி செலவில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1. கல்நார் கூரையினை அகற்றி கான்கீரிட் தளம் அமைத்தல்
2. மின் இணைப்பு வழங்குதல்
3. தேவைப்படும் மையங்களுக்கு மின் விசிறி அல்லது குழல் விளக்கு பொருத்துதல்
4. மாற்று திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சாய்வு தளம் அமைத்தல்
5. குழந்தை நேய கழிவறை கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல்
6. மைய வளாகத்தினுள் குடிநீர் வசதி ஏற்படுத்துதல்
7. மையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்
8. உணவு மற்றும் இதர தானியங்களை பாதுகாப்பாக வைத்திட சேமிப்பு கலன்கள் வாங்குதல்
9. மையங்களுக்கு சிமெண்ட தரைக்கு மாற்றாக டைல்ஸ் பதித்தல்
10. சுவர் சித்திரங்கள் வரைதல்
11. தீ தடுப்பு உபகரணங்கள் அமைத்தல்

### 4.19 வளரிளம் பெண்களுக்கான திட்டம்

வளரிளம் பெண்களுக்கான திட்டம் ஊட்டச்சத்து கூறுகள் மற்றும் ஊட்டச்சத்து அல்லாத கூறுகள் என இரு பிரிவுகளைக் கொண்டது. இத்திட்டத்தின் கீழ் அங்கன்வாடி

மையங்களில் பதிவு செய்துள்ள 11 முதல் 14 வயது வரையிலான பள்ளி செல்லா வளரிளம் பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு 165 கிராம் அளவு இணை உணவினை வீட்டிற்கு எடுத்துச் செல்லும் வகையில் ஆண்டிற்கு 300 நாட்களுக்கு ஊட்டச்சத்து மாவு கொடுக்கப்பட்டு வருகிறது. இச்செலவினத்தில் 50 சதவீதம் மாநில அரசு ஏற்றுகொள்கிறது.

இத்திட்டத்தின் ஊட்டச்சத்து அல்லாத கூறுகளானது 11–14 வயது பள்ளி செல்லா வளர் இளம் பெண்கள் மீண்டும் பள்ளி செல்வதையோ அல்லது திறன் வளர் பயிற்சி பெறுவதையும் மற்றும் முறைசாராக் கல்வி, கற்றலுக்கான பாலம்/திறன் வளர் பயிற்சிக்கு மாறுதலுக்கு துணை நின்று ஊக்குவிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில், இரும்புச் சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குதல், உடல் நலப் பரிசோதனை பரிந்துரைகள் ஊட்டச் சத்து மற்றும் உடல்நலக் கல்வி, வாழ்க்கைத் திறன் பயிற்சி, ஆலோசனைகள் அல்லது வழிகாட்டுதல் போன்ற பொது சேவைகள் வழங்கப்படுகிறது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.4.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**4.20 தேசிய குழந்தைகள் காப்பக திட்டம்**

சமுதாயத்தில் பெண்கள் தன்னுரிமை பெறும் வகையில் பணிக்குச் செல்லும் தாய்மார்களின் குழந்தைளை பாதுகாப்பாக பராமரிக்கும் வகையிலும், அக்குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் உடல் நலம் பேணி காக்கும் வகையிலும் குழந்தைகள் காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்காப்பகங்களில் 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகள் பாதுகாப்புடன் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

மத்திய அரசின் வழிமுறையின்படி கடந்த 2017ஆம் ஆண்டு மத்தியில், தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வந்த 944 குழந்தைகள் காப்பகங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டத்தின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு 60:30:10 (60% மத்திய அரசு : 30% மாநில அரசு : 10% தொண்டு நிறுவனம்) என்ற நிதி பகிர்வின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.8.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**4.21 பயிற்சி**

தமிழ்நாட்டில் மட்டுமே பரவலாக்கப்பட்ட, தனித்துவம் வாய்ந்த, மூன்றடுக்கு பயிற்சி முறை அனைத்து நிலை களப்பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. திறன் மிக்க, செலவு குறைவான, பொருளாதார பயன் நிரம்பிய, இப்பயிற்சி முறை பல தரப்பாலும் சிறப்பாக பாராட்டப்படும் முறையாக உள்ளது.

குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் மற்றும் அங்கன்வாடி பயிற்றுநர்களுக்கான பணி மற்றும் புத்தாக்கப் பயிற்சி, சென்னை தரமணியிலுள்ள மாநில பயிற்சி மையத்திலும், மேற்பார்வையாளர்களுக்கான பணி மற்றும் புத்தாக்கப் பயிற்சி, சென்னை, இடைநிலை பயிற்சி மையத்திலும் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள பரவலாக்கப்பட்ட பயிற்சி முறையின்படி, அங்கன்வாடி பணியாளர்களுக்கான பணி மற்றும் புத்தாக்கப்பயிற்சி மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கான புத்தறிவு மற்றும் புத்தாக்கப்பயிற்சி அனைத்து மாவட்டங்களிலும் வட்டார அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட களப்பணியாளர்களுக்கான, இளஞ்சிறார்களுக்கான உணவூட்டுதல் பயிற்சியின் (Infant Young Child Feeding)

மூலம், சீம்பாலின் முக்கியத்துவம் மற்றும் தாய்ப்பால் ஊட்டுதல், ஐந்து வயதிற்குட்பட்ட இளம் குழந்தைகளுக்கு இணை உணவு ஊட்டுதல், தாய் சேய் நல அட்டை குறித்த பயிற்சியினை களப்பணியாளர்களுக்கு அளிப்பதன் மூலம் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் இறப்பதைத் தவிர்க்கலாம். இப்பயிற்சி அனைத்து களப்பணியாளர்களுக்குமான பயிற்சி பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இந்தியாவில் தேசிய பொது ஒத்துழைப்பு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு நிறுவனம் (National Institute of Public Cooperation and Child Development) மூலம் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்களுக்கு இணையதளம் வழியாக பணிப்பயிற்சி அளிக்கும் திட்டத்தில் தமிழகம் முதல் மாநிலமாகத் திகழ்கிறது. கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் 33 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் 392 மேற்பார்வையாளர்கள், 6,790 அங்கன்வாடி பணியாளர்கள், 6,000 அங்கன்வாடி உதவியாளர்களுக்கு பணிப்பயிற்சியும், 14,720 அங்கன்வாடி பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

**2019–2020ஆம் ஆண்டில் மேற்படி பயிற்சிகள் நடத்துவதற்கென ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 4.22 தகவல், கல்வி, தொடர்பு மற்றும் விழிப்புணர்வு பணிகள்

வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான பராமரிப்பு, சரியான ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பழக்க வழக்கங்கள் போன்றவை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் சமுதாயப் பங்கேற்பை அதிகப்படுத்தவும் பல்வேறு தகவல், கல்வி மற்றும் தொடர்பு பணிகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

''சமுதாய வளைகாப்பு'', ''பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள், ''ஊட்டச்சத்து வார விழா'', ''தாய்ப்பால் வார விழா'', வானொலி மற்றும் தொலைக்காட்சியில் திட்டம் பற்றி விளம்பரப்படுத்துதல் போன்ற பல்வேறான தகவல் தொடர்புப் பணிகள் திட்டமிடப்பட்டு, கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான கவனம், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் தொடர்பான பழக்கவழக்கங்களில் சமுதாய பங்கேற்பினை ஊக்குவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181

சுகாதாரம், ஊட்டச்சத்து, குழந்தை வளர்ச்சி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான சுவரொட்டி, தொங்கும் அட்டைகள், புத்தகங்கள் போன்ற பல்வேறு தகவல் தொடர்பு சாதனங்கள் அச்சிடப்பட்டு, அனைத்து அங்கன்வாடி மையங்கள், சுகாதார நிலையங்கள், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் மற்றும் மாவட்ட திட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

திட்டம் குறித்த புதிய தகவல்கள் மக்களையும் பணியாளர்களையும் சென்றடைய **“சிட்டுக்குருவி சேதி தெரியுமா ?”** என்ற இதழ் இருமாதங்களுக்கொருமுறை அச்சிடப்பட்டு அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.



"பச்சிளம் மற்றும் சிறு குழந்தைகளுக்கான உணவூட்டும் முறைகள்" குறித்து பல்வேறான தகவல் தொடர்பு முனைப்பு இயக்கங்கள் மாவட்டம் மற்றும் வட்டார அளவில் நடத்தப்பட உள்ளன.

**4.23 கண்காணித்தல் மற்றும் முறைப்படுத்தல்**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட செயல்பாடுகளை கண்காணித்திடவும், மறுசீராய்வு செய்திடவும் பல்வேறு நிலைகளில் கண்காணிப்பு குழுக்கள் அரசால் வடிவமைக்கப்பட்டுள்ளன.

1. **மாநில அளவிலான கண்காணிப்பு மற்றும் மறுசீராய்வு குழு** :– தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராக கொண்டு ஆறு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது தேவைப்படும் போதோ இக்குழு கூடும்.
2. **மாவட்ட அளவிலான கண்காணிப்பு மற்றும் மறுசீராய்வு குழு** :– மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்டு இக்குழு காலாண்டிற்கு ஒரு முறையோ அல்லது தேவைப்படும் போதோ கூடும்.
3. **வட்டார அளவிலான கண்காணிப்பு குழு** :– துணை ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் இதன் தலைவர் ஆவார். இக்குழு காலாண்டிற்கு ஒரு முறை கூடும்.
4. **அங்கன்வாடி அளவிலான கண்காணிப்பு மற்றும் உதவிக் குழு** – குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்/ மேற்பார்வையாளர் நிலை–I இக்குழுவிற்கு தலைவர் ஆவார். இக்குழுவானது மாதத்திற்கு ஒருமுறை கூடும்.

**4.24 ஆதார் திட்டம்**

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட இயக்குநர் ஆதார் சேர்க்கைப் பதிவாளராக அறிவிக்கப்பட்டு, 434 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், ஆதார் சேர்க்கை முகவர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். 434 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்களுக்கு கணினி, மடிக்கணினி மற்றும் கைக்கணினி என 3 விதமான உபகரணங்கள் 2018–2019ஆம் ஆண்டில், ரூ.13.48 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து களப்பணியாளர்களுக்கும் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (Unique Identification Authority of India) அலுவலர்கள் மூலம் ஆதார் பதிவு குறித்து பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 1,700 தேர்ச்சிப் பெற்ற குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்/அங்கன்வாடி பணியாளர்கள் குழந்தைகளுக்கு ஆதார் எடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**4.25 அங்கன்வாடி ஊழியர்களின் நலன்**

தமிழகத்தில் உள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில் பணிபுரியும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் 7 வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி

வழங்கப்பட்டு வருகிறது. இதன் படி அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் முறையே ரூ.7700–24200, ரூ.5700–18000 மற்றும் ரூ.4100–12500 என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் பெற்று வருகின்றனர்.

இவைகளுடன் அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி, மலைவாழ்படி மற்றும் குளிர்காலப்படி ஆண்டு ஊதிய உயர்வும் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள், பணியிலிருந்து ஓய்வு பெறும் போது, ஒட்டு மொத்த தொகையாக ரூ.60,000லிருந்து ரூ.1,00,000ஆகவும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ரூ.25,000லிருந்து ரூ.50,000ஆகவும் 01.10.2017 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது. அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது சிறப்பு ஓய்வூதியமாக ரூ.1500லிருந்து ரூ.2000ஆகவும் 01.10.2017 முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு இரண்டு புடவைகள் சீருடையாக வழங்கப்படுகிறது. தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக பணிபுரியும் நான்கு அங்கன்வாடி பணியாளர்களுக்கு தேசிய அளவில்

ரூ.50,000 ரொக்கப்பரிசும், மாநில அளவில் 98 அங்கன்வாடி பணியாளர்களுக்கு தலா ரூ.10,000 ரொக்கப்பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது.

குழும இயக்ககம் அனைத்து நிலைகளிலும் உயர்தரமான முழு வளர்ச்சிப் பணிகளை ஊக்குவித்து உறுதி செய்யும் வகையிலும், அதன் மூலம் சமுதாய பங்களிப்புடன் அனைத்து நிலையில் உள்ள மக்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்து அவற்றை மேம்படுத்தி முழு பங்கேற்புடன் நலப்பணிகள் நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளை சென்றடைந்திடும் வகையிலும் செயல்படுகிறது.

## அத்தியாயம் – 5

## சமூகப் பாதுகாப்பு


**5.1** குழந்தைகளின் நலனை பாதுகாப்பதிலும், மேம்படுத்துவதிலும் அதற்கான திட்டங்களை செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு முன்னோடியான மாநிலமாக திகழ்கிறது. குழந்தைகள் ஒரு நாட்டின் எதிர்காலம் என்பதால், அவர்களுடைய நலவாழ்வு முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும். இடர்பாடான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 1887ஆம் ஆண்டிலேயே சிறுவர் சீர்த்திருத்தப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளது. மேலும், குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்காகவும், அதற்கான நிறுவனங்களின் செயல்பாட்டிற்காகவும், 1920ஆம் ஆண்டில், 'மெட்ராஸ் குழந்தைகள் சட்டம்' இயற்றப்பட்டது. 1947–ல் இத்துறை சிறைத்துறையிலிருந்து பிரிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்ட பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணி துறை என்று ஒரு தனித்துறையாக "முதன்மை ஆய்வாளர்" ஒருவரை தலைவராக கொண்டு செயல்பட்டது.

அதன் தொடர்ச்சியாக ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு சட்டம் 1956) சட்டம் இயற்றப்பட்டவுடன் அப்போதைய

சென்னை விழிப்புப்பணி சங்கம் என்ற அமைப்பின் கீழ் செயல்பட்டு வந்த அனைத்து நிறுவனங்களையும் இத்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டதால், இத்துறை "சான்றளிக்கப்பட்ட பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணி துறை" என அழைக்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் இத்துறையின் பெயர் கீழ்க்கண்டவாறு அவ்வப்போது மாற்றப்பட்டது:-

1958 சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணி துறை
1975 நல்வழிப்படுத்தும் நிர்வாகத் துறை
1981 சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணி துறை
1990 சமூகப் பாதுகாப்புத் துறை

**சமூகப் பாதுகாப்புத் துறையின் நிர்வாக அமைப்பு முறை**




ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தனிப்பட்ட நபர், நிறுவனம், அமைப்பு அல்லது அதிகாரத்தின் பராமரிப்பில்

இருக்கும்போது புறக்கணிப்பு, பாகுபாடு, வன்முறை, இழிவு, பொருளாதார மற்றும் பாலியல் சுரண்டல் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய உரிமை உண்டு. அத்தகைய பாதுகாப்புக்கான குழந்தைகளின் உரிமையை 1989ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கைகள் (UNCRC) மற்றும் பல மத்திய மற்றும் மாநிலச் சட்டங்கள் அங்கீகரிக்கிறது.

சமூகப் பாதுகாப்புத் துறை, குழந்தைகள் மற்றும் பெண்கள் தொடர்பான கீழ்க்காணும் இரண்டு முக்கிய சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது;

(i) இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015

(ii) ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

## 5.2 இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 (The Juvenile Justice (Care and Protection of Children) Act, 2015)

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ஆனது குழந்தையின் அதிகபட்ச நலனை கருத்திற்கொண்டு குழந்தை நேய சூழலுக்கேற்ற அணுகுமுறையை கடைபிடித்து இடர்பாடான சூழ்நிலையில் உள்ள குழந்தைகளின் முறையான பராமரிப்பு, பாதுகாப்பு,

மேம்பாடு, நடத்தும் முறை மற்றும் சமூகத்தின்பால் ஒருங்கிணைத்தல் ஆகியவை உறுதிசெய்வதை நோக்கமாக கொண்டுள்ளது. இச்சட்டம், (i) பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் (ii) சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் ஆகியோரை கையாளுவது குறித்து சட்டரீதியான வழிமுறைகளை வழங்கியுள்ளது. தமிழக அரசால் இச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) விதிகள், 2017 உருவாக்கப்பட்டுள்ளது.

### 5.3 பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள்

வீடு அல்லது தங்குமிடம் இல்லாத அல்லது மனநலம் / உடல்நலம் குன்றிய மாற்றுத்திறனாளி குழந்தைகள் அல்லது பராமரிக்க / வளர்க்க எவரும் இல்லாத குழந்தைகள் அல்லது பராமரிக்க தகுதியில்லாத பெற்றோரின் குழந்தைகள், கைவிடப்பட்ட, காணாமல்போன குழந்தைகள், வீட்டைவிட்டு வெளியேறிய குழந்தைகள், தெருவோர குழந்தைகள், பணிபுரியும் குழந்தைகள், தவறாக பயன்படுத்தப்பட்ட அல்லது போதைப் பொருட்களுக்கு அல்லது பாலியல் ரீதியாக பாதிப்பிற்குள்ளான குழந்தைகள் அல்லது இயற்கைச்

சீற்றத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 பிரிவு 2(14)ன் கீழ் தெரிவித்துள்ள குழந்தைகள் அனைவரும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் எனப்படுவர்.

### 5.3.1 குழந்தை நலக் குழுக்கள் (Child Welfare Committes)

குழந்தை நலக் குழுக்கள் மாநிலம் முழுவதும் உள்ள 32 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவிற்கு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கான நேர்வுகளை நடைமுறையிலுள்ள சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பிட்டுள்ள கடமைகளின் அடிப்படையில் தீர்வு செய்ய பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவருக்கு உள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு தலைவர்/தலைவி மற்றும் நான்கு உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர் உட்பட) கொண்ட குழந்தை நலக் குழுவின் நடவடிக்கைகள் குழந்தை நேய அணுகுமுறையின்படி அமைந்திருக்கும்.

சென்னை மாவட்டத்தில் உள்ள அதிகப்படியான வழக்குகளை கருத்தில் கொண்டு தற்போது உள்ள ஒரு

குழந்தை நலக் குழு தவிர மேலும் கூடுதலாக இரண்டு குழந்தை நலக் குழுக்களை அமைப்பதற்காக அரசு 2018–2019ஆம் ஆண்டில் ரூ.21.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.484.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.3.2 குழந்தைகள் இல்லங்கள் (Children Homes)

மாநிலத்தில் 1,212 குழந்தைகள் இல்லங்கள், இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–இன் கீழ் பதிவு செய்யப்பட்டு சமூகப் பாதுகாப்புத் துறையின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. 36 குழந்தைகள் இல்லங்கள் நேரடியாக அரசாலும், உடல்நலம் / மனநலம் குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 5 இல்லங்களையும் சேர்த்து, 145 குழந்தைகள் இல்லங்கள் அரசின் நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும் இயங்கி வருகின்றன. ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.2,160வீதம் பராமரிப்பு மானியமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை,

தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.11,450.74 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.3.3 திறந்தவெளிப் புகலிடங்கள்(Open Shelters)

திறந்தவெளிப் புகலிடங்கள், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் குறிப்பாக வீடற்ற குழந்தைகள், தெருவோர குழந்தைகள், வீட்டைவிட்டு வெளியேறிய குழந்தைகள் மற்றும் ஏனைய பாதிப்புக்குள்ளான சூழ்நிலையில் உள்ள குழந்தைகளுக்கான சேவைகளை வழங்குகிறது. இவை, மேற்படி குழந்தைகள் தத்தம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படும் வரையிலோ அல்லது குழந்தைகள் இல்லங்களில் சேர்க்கும் வரையிலோ, தற்காலிக புகலிடம் வழங்கி வருகிறது.

தற்போது, தமிழ்நாட்டில் 11 திறந்தவெளிப் புகலிடங்கள் சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தலா ஒன்றும் மற்றும் சென்னையில் 7 இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.2,160 வீதம் பராமரிப்பு மானியமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181

வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.265.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.3.4 சிறப்பு முயற்சிகள்**

(i) அரசு குழந்தைகள் இல்லக் குழந்தைகளுக்கு 2018–2019ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் ரூ.10.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

(ii) குழந்தைகளின் வழக்குகளை விரைந்து தீர்வு செய்வதற்கும், குழந்தைகளுக்கு உதவி புரிவதற்கும் வழக்கு விசாரணையில் தொடர்புடைய வல்லுநர்கள் மற்றும் பற்றாளர்கள் அனைவரும் ஒரே இடத்தில் கூடுவதற்கு ஏதுவாக தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் காணொலிக் காட்சி வசதியுள்ள பல்நோக்கு வளமையம் ஒன்று கெல்லீஸில் உள்ள சிறுமியருக்கான அரசு குழந்தைகள் இல்லத்தில் ரூ.15.00 இலட்சம் செலவில்

2018–2019ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

(iii) 2018–2019ஆம் ஆண்டில் 5 குழந்தைகள் நீதிமன்றங்களில், குழந்தை நேய சூழல் ரூ.35.00 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

(iv) மாநிலத்தில் குழந்தை பாதுகாப்புச் சேவைகளை உறுதி செய்ய கிராமம், வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழுக்களை அரசு அமைத்துள்ளது. குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் திறம்பட செயல்படுவதை கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களால், 2018–2019ஆம் ஆண்டில் 2,664 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் குழந்தைகள் இல்ல மாணவர்களின் விளையாட்டு போட்டி ஆண்டு விழா.

### 5.3.5 உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாடு


(i) மதுரை, அன்னை சத்தியா அரசு குழந்தைகள் இல்லத்திற்கு ரூ.500.00 இலட்சம் செலவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

(ii) தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளி சிறுவருக்கான அரசு குழந்தைகள் இல்லத்திற்கு ரூ.365.00 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

(iii) சென்னை, இராயபுரம் சிறுவருக்கான அரசு குழந்தைகள் இல்லத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் கைப்பந்து ஆடுகளம் ரூ.73.70 இலட்சம் செலவில் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது.

(iv) 29 அரசு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் கட்டமைப்பு மாற்றங்களுக்கு, தொடராச் செலவின மானியமாக ரூ.375.00 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(v) மேலும், 29 அரசு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் வசதிகள் மேம்பாட்டிற்காக ரூ.515.65 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.













மதுரை கூர்நோக்கு புதிய இல்ல கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன உட்கட்டமைப்பு வசதிகள்

### 5.3.6 குழந்தை தத்தெடுத்தல்

ஒவ்வொரு குழந்தைக்கும் நேசமிக்க குடும்ப சூழ்நிலை பெறும் உரிமை உண்டு. குழந்தை தத்தெடுப்பு திட்டம் மூலம் ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கு தகுதிவாய்ந்த குடும்பங்களை கண்டறிந்து தத்து வழங்குவதன் வாயிலாக மேற்குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறுகிறது.

தத்தெடுத்தல் முறை மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் தன்னாட்சி நிறுவனமாக செயல்படும் மத்திய தத்து வள அதிகார அமைப்பால் (Central Adoption Resource Authority-CARA) ஏற்படுத்தப்பட்ட தத்தெடுத்தல் ஒழுங்குமுறைகள் **2017**ன்படி நிர்வகிக்கப்படுகிறது. குழந்தைகளைத் தத்தெடுத்தல், பதிவு செய்தல் மற்றும் அதற்கான நடைமுறைகள் மத்திய தத்து வள அதிகார அமைப்பின் இணையதளம் www.cara.nic.in வாயிலாக மேற்கொள்ளப்படுகிறது. குழந்தைகள் தத்தெடுப்பிற்கான வழிமுறைகள் இந்தியா முழுமைக்கும் பொதுவானது.

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், **2015**–இன் கீழ் சமூகப் பாதுகாப்புத் துறை

ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் “மாநில தத்து வள முகமை ” (State Adoption Resource Agency-SARA) மாநிலத்தில் தத்தெடுத்தல் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பான அமைப்பாகும். தத்தெடுத்தலை எளிதாக புரிந்து கொள்ள ஏதுவாக தத்தெடுத்தல் குறித்த கையேடு ஒன்றை மாநில தத்து வள முகமை வெளியிட்டுள்ளது. பொதுமக்களிடையே குழந்தை தத்தெடுத்தல் தொடர்பான செய்திகளை பரப்புவதற்கு அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மருத்துவமனைகள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள் மற்றும் பொது இடங்களில் விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. சட்டபூர்வமற்ற குழந்தை தத்தெடுத்தலைத் தடுக்க மருத்துவத் துறை வல்லுநர்களுக்கு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

### 5.3.7 சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள்

தமிழ்நாட்டில் உள் மற்றும் வெளிநாட்டில் தத்து வழங்கிட 21 சிறப்பு தத்தெடுப்பு நிறுவனங்கள் செயல்படுகின்றன. மேற்படி நிறுவனங்கள் முறையே மதுரை(2), காஞ்சிபுரம் (3)

சேலம் (2) மற்றும் அரியலூர், சென்னை, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நாமக்கல், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றுமாக அமைந்துள்ளன.

1993 முதல் மார்ச் 2019 வரை இத்திட்டத்தில் தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விவரம்:–

| வ. எண் | தத்தெடுப்பின் வகைகள் | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | உள்நாட்டுத் தத்தெடுப்பு | 1,317 | 3,926 | 5,243 |
| 2 | வெளிநாட்டுத் தத்தெடுப்பு | 106 | 388 | 494 |
| மொத்தம் | | **1,423** | **4,314** | **5,737** |

2018–2019ஆம் ஆண்டில் தத்து வழங்கப்பட்ட குழந்தைகளின் விவரம்

| வ. எண் | தத்தெடுப்பின் வகைகள் | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | உள்நாட்டுத் தத்தெடுப்பு | 68 | 115 | 183 |
| 2 | வெளிநாட்டுத் தத்தெடுப்பு | 7 | 19 | 26 |
| மொத்தம் | | **75** | **134** | **209** |

### 5.3.8 நிதி ஆதாரத் திட்டம் (Sponsorship)

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகளை நிறுவனங்களில் சேர்ப்பதற்கு பதிலாக குடும்பங்களில் இணைப்பதற்கு நிதி ஆதாரத் திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் ரூ.2000 வீதம் மூன்றாண்டுகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2018–2019ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1,312 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ரூ.314.88 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 5.4 சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள்

குற்றம் புரிந்ததாகக் கூறப்படும் நாளன்று பதினெட்டு வயது நிறைவடையாத, சட்டத்திற்கு முரணான செயல்களை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட குழந்தைகள் 'சட்டத்துக்கு முரணாக செயல்பட்ட குழந்தைகள்' எனப்படுவர்.

### 5.4.1 இளைஞர் நீதிக் குழுமங்கள் (Juvenile Justice Boards)

சட்டத்திற்கு முரணாக செயல்படும் குழந்தைகள் தொடர்பான வழக்குகளை கையாள்வதற்காக மாநிலத்தில்

இளைஞர் நீதிக் குழுமங்கள் நிறுவப்பட்டுள்ளது. இளைஞர் நீதிக் குழுமமானது, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் (முதன்மை நீதித்துறை நடுவர்) மற்றும் சமூகப் பணியில் அனுபவமுள்ள இரண்டு உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர்) ஆகியோரைக் கொண்டு செயல்படுகிறது. இளைஞர் நீதிக் குழும நடைமுறைகள் ஒரு நீதிமன்ற நடைமுறைபோல் அல்லாமல் குழந்தைகளுக்கு ஏற்ற வகையில் குழந்தை நேய அணுகுமுறைப்படி நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் 32 மாவட்டங்களிலும் இளைஞர் நீதிக் குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

திருநெல்வேலி, அரசினர் கூர்நோக்கு இல்ல குழந்தைகளை வழக்குகள் விசாரணைக்காக அவ்வப்போது சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுக்கு அழைத்து செல்வதை தடுக்கவும், அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யவும் 2016–2017ஆம் ஆண்டில், திருநெல்வேலி அரசு கூர்நோக்கு இல்லத்துடன் சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மூன்று மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுக்கிடையே காணொலிக் காட்சி வசதி

ரூ.38.91 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2017–2018ஆம் ஆண்டில் இவ்வசதி நீட்டிக்கப்பட்டு சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லத்துடன் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஐந்து மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுக்கிடையே காணொலிக் காட்சி வசதி ரூ.49.72 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.260.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.4.2 கூர்நோக்கு இல்லங்கள் (Observation Homes)

சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகளின் விசாரணை இளைஞர் நீதிக் குழுமங்கள் முன் நிலுவையில் உள்ள காலங்களில், அக்குழந்தைகளுக்கு தற்காலிகமான பராமரிப்பு மற்றும் மறுவாழ்வினை கூர்நோக்கு இல்லங்கள் வழங்குகின்றன. மதுரை மற்றும் கோயம்புத்தூரில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு வந்த கூர்நோக்கு இல்லங்கள் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. மேலும், சிறப்பான சேவை வழங்குவதற்காக, மதுரை கூர்நோக்கு

இல்லத்திற்கு, அரசு 27 பல்வேறு புதிய பணியிடங்களை 2019–2020ஆம் ஆண்டில் தோற்றுவித்துள்ளது. தற்போது, மாநிலம் முழுவதும் 9 கூர்நோக்கு இல்லங்கள் அரசால் நேரடியாக நடத்தப்பட்டு வருகின்றன.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.527.29 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.4.3 சிறப்பு இல்லங்கள் (Special Homes)

தவறிழைத்ததாகக் கருதப்படும் குழந்தைகள் உரிய விசாரணைக்குப்பின் இளைஞர் நீதிக் குழுமத்தால் குற்றம் உறுதி செய்யப்பட்டவர்கள் என தீர்மானிக்கப்படும் நேர்வில் அவர்களுக்கான மறுவாழ்வினை சிறப்பு இல்லங்கள் வழங்குகின்றன. இக்குழந்தைகள் மூன்றாண்டுகளுக்கு மிகாமல் இவ்வில்லங்களில் தங்கலாம். பெண் குழந்தைகளுக்காக சென்னையில் ஓர் அரசு சிறப்பு இல்லமும், சிறுவர்களுக்காக செங்கல்பட்டில் ஓர் அரசு சிறப்பு இல்லமும் ஆக 2 சிறப்பு இல்லங்கள் இயங்கி வருகின்றன.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.252.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.4.4 பாதுகாப்பு இடம் (Place of Safety)

18 வயதிற்குள் சட்டத்திற்கு முரணாகச் செயல்பட்ட 18 வயதை கடந்த ஒரு நபர் அல்லது 16 வயதிலிருந்து 18 வயதிற்கு இடைப்பட்ட குழந்தை ஒரு கொடிய குற்றத்தைச் செய்ததாக கருதப்படுபவராகவோ அல்லது தண்டிக்கப்பட்ட குற்றவாளியாகவோ இருக்கும்போது அவர் இளைஞர் நீதிக் குழுமம் அல்லது குழந்தைகள் நீதிமன்றத்தின் ஆணையின்படி "பாதுகாப்பு இடத்தில்" தங்க வைக்கப்படுகின்றனர். 2016–2017ஆம் ஆண்டில், வேலூரில் ஏற்கெனவே செயல்பட்ட இல்லத்தினை புனரமைத்து, ஒரு பாதுகாப்பு இடம் அரசால் ரூ.42.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, 2018–2019ஆம் ஆண்டில், வேலூரில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு இடத்திற்கு, 27 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

## 5.5 குழந்தைகளுக்கான உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்துதல் சேவை

குடிப் பழக்கத்திலிருந்து விலகிய குழந்தைகள் உட்பட உளவியல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் பாதிக்கப்பட்ட

அரசு கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் சிறப்பு இல்லக் குழந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல் சேவைகள் உளவியலாளர்கள் மூலம் வழங்கப்படுகிறது. ஓர் உளவியலாளருக்கு, நாள் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் மதிப்பூதியத்தில், இச்சேவைகள் ஒரு வருடத்தில் 180 நாட்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், 14 வளமையங்களானது, இளைஞர் நீதிக் குழுமங்கள் மற்றும் குழந்தை நலக் குழுக்கள் உளவியல் மதிப்பீடு செய்வதில் உதவிபுரிகிறது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.16.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.6 தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி (The Tamil Nadu Juvenile Justice Fund)

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன்படி, குழந்தைகள் நலன் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள “தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி” ரூ.25.00 இலட்சம் மூலதன நிதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து குழந்தைகளுக்கு கல்வி, மருத்துவம், பயிற்சி,

பொழுதுபோக்கு, விளையாட்டு, சுயதொழிலுக்கான மூலப்பொருட்கள் அல்லது மூலதனம் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சிக்கான ஏனைய பிற செயல்களுக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

**5.7 குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையம்**

குழந்தைகளுக்கான பிரத்தியேக போதை தடுப்பு மையம் ஒன்று அரசால் ஏற்படுத்தப்பட்டு, அம்மையம் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மையத்தில், மது மற்றும் போதை பொருட்களுக்கு அடிமையான குழந்தைகளுக்கு, உள் மற்றும் புறநோயாளியாக சிகிச்சை அளிக்கப்படுகிறது. 2018–2019ஆம் ஆண்டில், இம்மையத்தில், 98 குழந்தைகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.20.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.8 நன்னடத்தை அமைப்பு (Probation System)

ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தைகளின் பங்களிப்புடன் விரைவான மறுவாழ்வு மற்றும் குடும்பத்தினருடன் குழந்தைகளை ஒருங்கிணைக்க நன்னடத்தை பணி ஒரு பயனுள்ள கருவியாக செயல்படுகிறது. சமூகப் பாதுகாப்புத் துறையில், மாவட்டத்திற்கு ஒரு நன்னடத்தை அலுவலர் (Probation Officer) வீதம் **32** மாவட்டங்களிலும் நன்னடத்தை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதிகப்படியான வழக்குகள் காரணமாக சென்னை மாவட்டத்தில் கூடுதலாக **3** நன்னடத்தை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்கள் முன் நடத்தப்படும் வழக்குகள் மீது சரியான முடிவு மேற்கொள்ள சமூக விசாரணை அறிக்கைகள் தயாரிப்பது நன்னடத்தை அலுவலர்கள் பணியாகும். ஒரு சில வழக்குகளில் சிறார்களை தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் அவர்களின் பிற்காப்பு நிலை அறிதல் போன்றவை நன்னடத்தை அலுவலர்களால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நன்னடத்தை பணியினை ஆய்வு செய்யவும் மேம்படுத்தவும் அரசு ஒரு முதன்மை

நன்னடத்தை அலுவலரையும் இரு மண்டல நன்னடத்தை அலுவலரையும் நியமித்துள்ளது.

### 5.9 பிற்காப்பு நிறுவனங்கள் (After Care Organisations)

பல்வேறு காரணங்களால் தன் குடும்பத்துடன் மீண்டும் சேர முடியாத இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் இல்லங்கள் / சிறப்பு இல்லங்களிலிருந்து வீடேகிய பின்பும் தொடர்ந்து உதவி தேவைப்படும் குழந்தைகள் அவர்களது 21 வயது நிறைவெய்தும் வரை பிற்காப்பு நிறுவனங்களில் வழக்கமாக அனுமதிக்கப்படுகின்றனர். இளைஞர்களுக்கான இரண்டு 'பிற்காப்பு நிறுவனங்கள்' ஒன்று காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா ஆத்தூரிலும், மற்றொன்று மதுரையிலும் இயங்கி வருகின்றன. இளம் பெண்களுக்காக வேலூரில் ஒரு 'பிற்காப்பு நிறுவனம்' செயல்பட்டு வருகிறது.

இவை தவிர, வயது முதிர்ந்த மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பிற்காப்பு நிறுவனம் ஒன்று குழந்தை பாதுகாப்புச் சேவைகள் திட்டத்தின் உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் ஒரு

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181

தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் செயல்பட்டு வருகிறது.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.169.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.10 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி**

முறையான கல்வி வழங்குவதற்காக பெரும்பாலான குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் வளாகத்திலேயே பள்ளிக் கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் செயல்படுகின்றன. அவ்வாறு, வளாகத்திலேயே பள்ளிகளற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வரவேற்பு பிரிவுகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்படும் குழந்தைகளுக்கு முறைசாராக் கல்வி மற்றும் தொழிற்கல்வி அளிக்கப்பட்டு வருகின்றன.

நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் திறனை மேம்படுத்த தையல், புத்தகம் கட்டுதல், திரை அச்சடித்தல், அடிப்படை கணிணி பயிற்சி, பேக்கரி பொருட்கள்

தயாரித்தல் போன்ற குறுகியகால தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சியின் மூலம் 1,035 சிறார்கள் பயனடைந்துள்ளனர். மேலும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தையல் இயந்திரம் இயக்குபவர், எலக்ட்ரீஷியன் உதவியாளர், பிளம்பர் உதவியாளர், ஏ.சி. பழுதுபார்த்தல், இருசக்கர வாகன பழுதுபார்த்தல் ஆகிய குறுகிய காலப் பயிற்சி திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியின் மூலம் 250 சிறார்கள் பயனடைந்துள்ளனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.45.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**



கூர்நோக்கு இல்ல சிறார்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்படுகிறது.

## 5.11 குழந்தைகளுக்கான கட்டணமில்லா தொலைபேசி (Childline) 1098

சைல்ட்லைன் **'பத்து ஒன்பது எட்டு' (1098)** என்பது இடர்பாடான சூழலில் உதவி தேவைப்படும் நிலையில் உள்ள குழந்தைகளுக்கான 24 மணி நேர தேசிய அளவிலான இலவச தொலைபேசி சேவையாகும். துன்புறும் சூழலில் உள்ள குழந்தைகள், உடனடியாக உதவி தேவைப்படும் குழந்தைகள் அல்லது இத்தகைய குழந்தைகளை காணும் எந்த நபரும், இக்குழந்தைகளை காப்பாற்றுவதற்காகவும், உதவுவதற்காகவும் இந்த தொலைபேசி சேவையை பயன்படுத்தலாம். இந்திய அரசின் நிதியுதவி மூலம் சைல்டுலைன் இந்தியா பவுண்டேசன் கட்டுப்பாட்டின் கீழ் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் சைல்ட்லைன் சேவை செயல்படுத்தப்படுகின்றன. 2018–2019ஆம் ஆண்டில் இச்சேவையின் கீழ் 77,490 தொலைபேசி அழைப்புகள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 26,802 அழைப்புகள் உதவிக்கான அழைப்புகள் ஆகும்.

## 5.12 குழந்தை பாதுகாப்புச் சேவைகள் (Child Protection Services)

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் என்ற ஒரு குடையின் கீழ் "குழந்தை பாதுகாப்புச் சேவைகள்" மைய அரசின் நிதியுதவியுடன் செயல்படும் திட்டமாகும். குழந்தை பாதுகாப்பிற்காக மாநிலத்தில் இளைஞர் நீதி நிர்வாகத்தினை சிறப்பாக மேம்படுத்துவதற்கு தேவையான உரிய கட்டமைப்புகளை உருவாக்கி தமிழக அரசு இத்திட்டத்தை மாநிலத்தில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. துயருறும் சூழலில் உள்ள குழந்தைகளுக்கு பாதுகாப்பான சூழலை அரசு மற்றும் பொது மக்களின் பங்களிப்போடு ஏற்படுத்த குழந்தை பாதுகாப்புச் சேவைகள் முனைந்துள்ளது.

இத்திட்டம் இளைஞர் நீதிச் சட்டம் மற்றும் குழந்தைகள் தொடர்பான இதர சிறப்புச் சட்டங்களை செம்மையாகச் செயல்படுத்துவதையும், துயருறும் சூழலில் உள்ள குழந்தைகள் நலனுக்காக பங்களித்தலையும், சமுதாயத்தில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றோடல்லாமல், குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை, சுரண்டல், புறக்கணித்தல், கைவிடப்படுதல் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பிரிதல், போன்றவற்றை

ஏற்படுத்தக் கூடிய துன்பச் சூழல்களைத் திறம்பட குறைத்து, குழந்தைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேற்கூறிய நோக்கத்தை அடைய கீழ்க்காணும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன:–

- குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகளின் தரம் மற்றும் பயன்பாட்டினை மேம்படுத்துதல்.
- தற்போது இந்தியாவில் நிலவும் குழந்தை உரிமைகள் மற்றும் குழந்தை பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- குழந்தைகள் பாதுகாப்பிற்கான கடமையையும், பொறுப்புணர்வையும் ஏற்படுத்துதல்.
- குழந்தைகள் பாதுகாப்பு குறித்த தகவல் மேலாண்மைத் திட்டம், காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் திட்டம் மற்றும் குழந்தை பாதுகாப்புச் சேவை கண்காணிப்பு ஆகியவற்றை உருவாக்குதல்.
- அனைத்து பிரிவுகளுக்கிடையே, எல்லா அளவிலும் தகுந்த செயல்பாட்டை உறுதிப்படுத்துதல்.

**5.12.1 குழந்தை பாதுகாப்புச் சேவைகள் கீழ் செயல்படும் சேவை அளிக்கக் கூடிய கட்டமைப்புகள்**

குழந்தை பாதுகாப்புச் சேவைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்த, கீழ்க்காணும் சேவை அளிக்கக் கூடிய கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:-

1. மாநிலக் குழந்தை பாதுகாப்புச் சங்கம்
2. மாவட்டக் குழந்தை பாதுகாப்புச் சங்கங்கள் / அலகுகள்
3. மாநிலத் தத்தெடுப்பு வள முகமை

இத்திட்டத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் ஆகியோர் நேரடியாக பயனடைகிறார்கள். குழந்தை பாதுகாப்புச் சேவைகள் கீழ் நடத்தப்படும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வாயிலாக சமூகத்திலுள்ள அனைத்து குழந்தைகளும் பயன்பெற்று வருகின்றனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.2389.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.13 குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்களை பதிவு செய்தல்

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–இன் கீழ் அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்களும் கட்டாயமாகப் பதிவு செய்யப்படவேண்டும். தமிழ்நாடு இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) விதிகள், 2017ஆனது குழந்தை பாதுகாப்பு நிறுவனங்களை பதிவு செய்ய கட்டட உறுதித்தன்மை, தீ தடுப்பு மற்றும் பாதுகாப்பு, சுகாதாரம் ஆகியவற்றிற்கு சம்பந்தப்பட்ட துறையில் சான்றிதழ்கள் பெறப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. குழந்தைகள் தங்குவதற்கான இடவசதி, கழிவறை மற்றும் குளியலறைகளின் எண்ணிக்கை, பணியாளர்கள் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவனத்தில் தங்கவைக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்படுகிறது. இதன்மூலம் தேவைப்படும் குறைந்தபட்ச வசதிகள் கொண்ட நிறுவனங்கள் மட்டுமே இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–இன் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. தற்போது மாநிலத்தில் 1,235 குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றில்

**55,384** குழந்தைகள் தங்கவைத்து பராமரிக்கப்படுகின்றனர். இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், **2015**இன் கீழ் பதிவு பெறாமல் எந்தவொரு குழந்தை பராமரிப்பு நிறுவனமும் செயல்பட கூடாது என்பதை அரசு உறுதி செய்கிறது.

## 5.14 குழந்தை பின்தொடர் முறைமை (Child Tracking System)

காணமால் போன மற்றும் கண்டறியப்பட்ட குழந்தைகளின் விவரங்களை அறிய மத்திய அரசு, குழந்தை பின் தொடர்முறைமை என்ற தேசிய இணையதளத்தை www.trackthemissingchild.gov.in அமைத்துள்ளது. மேற்காணும் பின்தொடர் முறைமை காணாமல் போன குழந்தைகள் விவரங்களை கண்டறியப்பட்ட குழந்தைகளுடைய விவரங்களுடன் ஒப்பிட உதவுகிறது. குழந்தை பின்தொடர் முறைமையானது மாநிலத்தின் அனைத்துக் காவல் நிலையங்கள், மாவட்ட அலுவலகங்கள், குழந்தை நலக் குழுக்கள், இளைஞர் நீதிக் குழுமங்கள் மற்றும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையே இணைப்பை ஏற்படுத்தியுள்ளது.

## 5.15 ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956 (The Immoral Traffic (Prevention) Act, 1956)

ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956ஆனது பெண்களை வணிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதை தடுப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. பாலியல் தொழிலிலிருந்து மீட்கப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் மற்றும் குடும்பத்தாருடன் ஒப்படைக்கவும் மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்களை அரசு ஏற்படுத்தி நடத்தி வருகிறது.

### 5.15.1 மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள்

மாநிலத்தில் சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 இடங்களில் மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களை அரசு நடத்தி வருகிறது. அச்சுறுத்தலுக்குள்ளான அல்லது பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிமன்ற ஆணையின்படி மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 'பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நிதியிலிருந்து' ரூ.10,000 நிதியுதவி வழங்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பெண்களின் வழக்குகளை விரைந்து தீர்வு செய்யவும் அவர்களை நீதிமன்றத்தின் நேரடி விசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கு பதிலாகவும், காணொலிக் காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ள மயிலாப்பூர், அரசினர் மகளிர் காப்பகத்திற்கும் சைதாப்பேட்டை பெருநகர நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையே காணொலி காட்சி வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 5.15.2 மீட்புப் புகலிடங்கள் (Rescue Shelters)

ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956–இன் கீழ் மீட்கப்பட்ட பெண்கள் நீதிமன்ற உத்தரவுப்படி அவர்களது வழக்குகள் முடிக்கப்படும் வரை தற்காலிகமாக மீட்புப் புகலிடங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இந்தப் புகலிடங்கள் சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்களிலும் மற்றும் வேலூர் பிற்காப்பு நிறுவனத்திலுமென மாநிலத்தில் 6 மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் 2018–2019ஆம் ஆண்டில் 780 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு – செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.473.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.15.3 ‘உஜ்ஜவாலா’ திட்டம்

பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தலை தடுக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ‘உஜ்ஜவாலா’ திட்டம் அந்நடவடிக்கைகளில் ஒன்றாகும். இத்திட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வணிகரீதியான பாலியல் சுரண்டலைத் தடுக்கவும், கடத்தப்பட்டவர்களை மீட்டு, மறுவாழ்வளித்து சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் வழிவகை செய்வதற்குமான ஒரு விரிவான திட்டமாகும். மாநிலம் முழுவதும் 5 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் 17 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2018–2019ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 422 பாதிப்பிற்குள்ளான பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**2019–2020ஆம் நிதியாண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.79.86 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.16 போதை தடுப்புத் திட்டம்

மத்திய அரசின் போதை தடுப்புத் திட்டத்தை மாநிலத்தில் நடைமுறைப்படுத்தும் துறையாக சமூகப் பாதுகாப்புத் துறை விளங்குகிறது. ஒருங்கிணைந்த போதை

அடிமைகள் மறுவாழ்வு மற்றும் சிகிச்சை மையங்களில் மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு உள் மற்றும் புறநோயாளிகளாக சிகிச்சை வழங்கப்படுகிறது. தற்போது மாநிலத்தில் 22 மையங்கள் செயல்படுகின்றன. 2018–2019ஆம் ஆண்டில் இம்மையங்கள் மூலம் மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையான 4,520 நபர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்கு ஏற்படும் பாதகமான விளைவுகளை குறைப்பதற்கு, அதன் விளைவு குறித்து கற்பிப்பதற்கு, போதை தடுப்பு மற்றும் மறுவாழ்வு போன்ற பல்நோக்கு அணுகுமுறையை கொண்ட, போதைப் பொருள் தேவை குறைப்புக்கான தேசிய செயல் திட்டம் (National Action Plan for Drug Demand Reduction) என்ற புதிய திட்டத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. போதைப் பொருள் தேவை குறைப்புக்கான தேசிய செயல் திட்டம், 21 தன்னார்வத் தொண்டு மற்றும் அரசு நிறுவனங்கள் மூலம் ரூ.228.33 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.

**5.17 தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்**

நடைமுறையில் உள்ள குழந்தை நலன் சார்ந்த சட்டங்களின் செயலாக்கத்தினை கண்காணிக்கவும், மீளாய்வு செய்யவும், குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், **2005**ன் பிரிவு **17(1)–**ன் படி தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஏற்படுத்தப்பட்டு, தலைவர் மற்றும் **6** உறுப்பினர்களைக் கொண்டு **18.01.2013** முதல் செயல்பட்டு வருகிறது. தற்போதைய ஆணையம் ஒரு தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்கள் கொண்டு அரசால் நியமிக்கப்பட்டு **05.05.2017** முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

இந்த மாநில ஆணையத்தின் முக்கிய நோக்கமே குழந்தைகளின் உச்சபட்ச நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்ய தற்சமயம் அமுலில் இருக்கும் குழந்தைகள் சார்ந்த பல்வேறு சட்டங்களின் செயலாக்கத்தினை மேற்பார்வை செய்தலேயாகும்.

இவ்வாணையத்தால் **05.05.2017** முதல் **31.03.2019** வரையிலான காலகட்டத்தில் பின்வரும் குழந்தை உரிமைகள் தொடர்பான சட்டங்கள் சார்ந்த வழக்குகள் கையாளப்பட்டுள்ளது:-

| | | |
|---|---|---|
| 1 | இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 | 887 |
| 2 | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 | 540 |
| 3 | குழந்தை திருமணத் தடைச் சட்டம், 2006 | 53 |
| 4 | குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 | 639 |
| 5 | குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 | 114 |
| | **மொத்தம்** | **2,233** |

2018–2019ஆம் ஆண்டில் இவ்வாணையத்தால் கையாளப்பட்ட பின்வரும் குழந்தை உரிமைகள் தொடர்பான சட்டங்கள் சார்ந்த வழக்குகளின் விவரம் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 | 718 |
| 2 | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012 | 416 |
| 3 | குழந்தை திருமணத் தடைச் சட்டம், 2006 | 22 |
| 4 | குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 | 341 |
| 5 | குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 | 32 |
| | **மொத்தம்** | **1,529** |

இவ்வாணையம் தற்கொலைக்கு முயலுகின்ற குழந்தைகளின் மனநிலையை மாற்றி அவர்களை மனமாற்றம் செய்வதை முக்கிய பணியாகக் கொண்டுள்ளது. இதுவரை 394 குழந்தைகள் தற்கொலையின் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாணையம் பொறுப்பேற்ற பின் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் பல ஆய்வுகளை நடத்தி உள்ளது. இதுவரை 694 ஆய்வுகள் தற்போதைய ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள், 197 ஆய்வுகள் 2018–2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2019–2020ஆம் நிதி ஆண்டில் ஆணையத்திற்கு ரூ.77.09 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.18 குழந்தை பாதுகாப்பிற்காக பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு

குழந்தை பாதுகாப்பு சம்பந்தமான எந்தவொரு செயலும் வெற்றியடைய பல்வேறு துறைகளின் சேவைகளை ஒருங்கிணைப்பது மிகவும் அவசியமானதாகும். அவ்வாறு, பல்வேறு துறைகளால் வழங்கப்படும் சேவைகளை ஒருங்கிணைக்க சமூகப் பாதுகாப்புத் துறை தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

அவ்வகையில் சமூக நலம், சைல்ட்லைன், காவல், நீதி, மாற்றுத் திறனாளிகள் நலம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், தொழிலாளர் நலம், கல்வி, இரயில்வே காவல், வருவாய், சமகரா சிக்ஷா (முன்னர் அனைவருக்கும் கல்வித் திட்டம்), ஊரக வளர்ச்சி, நகராட்சி நிருவாகம், மருத்துவம் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகள் மட்டுமின்றி தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடனும் நெருங்கிய ஒருங்கிணைப்புடன் சமூகப் பாதுகாப்புத் துறை செயல்பட்டு வருகிறது. இத்துறையானது, கூடுதல் காவல் துறை தலைமை இயக்குநரின் கீழ் செயல்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் பிரிவுடனும் இணைந்து செயல்பட்டு வருகிறது.

athiyamanteam.com | Video Class+ Test Batch 8681859181

## அத்தியாயம் – 6

## சமூகப் பாதுகாப்புத் திட்டம்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு தேசிய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. முதியோர் ஓய்வூதியத் திட்டம் கடந்த 1962ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.20 வழங்கப்பட்டது. சமூதாயத்தில் நலிவடைந்த பிரிவினரான மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதைக் கடந்த ஆதரவற்ற மற்றும் திருமணமாகாத ஏழைப் பெண்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தற்போது அனைத்து சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான தகுதி காரணிகள் வெகுவாக தளர்த்தப்பட்டுள்ளது. 2019–2020ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியத் திட்டங்களுக்கு ரூ.4,060.54 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2019 அன்று உள்ள

பதிவுகளின்படி **29.50** இலட்சம் பயனாளிகள் கீழ்காணும் திட்டங்களின் மூலம் பயன் பெற்று வருகின்றனர்.

| வ . எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை 31.03.2019–ன் படி |
|---|---|---|
| 1 | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 12,57,478 |
| 2 | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 60,154 |
| 3 | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதியத் தேசியத் திட்டம் | 5,25,055 |
| 4 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் 2,59,690 | 2,59,690 |
| 5 | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | 4,22,276 |
| 6 | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | 2,88,596 |
| 7 | ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 1,11,086 |
| 8 | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 21,828 |
| 9 | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியம் | 4,461 |
| | மொத்தம் | 29,50,624 |

## மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் பங்கீடு

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வயது | மத்திய அரசின் பங்கீடு ரூ. | மாநில அரசின் பங்கீடு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 60 வயது முதல் 79 வயது வரை | 200/– | 800/– |
| | | 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | 500/– | 500/– |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | 18 வயது முதல் 79 வயது வரை | 300/– | 700/– |
| 3. | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதியத் தேசியத் திட்டம் | 40 வயது முதல் 79 வயது வரை | 300/– | 700/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | | 1000/– |
| 5. | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | | 1000/– |
| 6. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | | 1000/– |
| 7. | ஆதரவற்ற / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | | 1000/– |
| 8. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது | | 1000/– |

**தகுதி வரம்பு**

அரசாணை (நிலை) எண்.27, சமூகப் நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 22.02.2016–ன்படி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெற ஊனத்தின் தன்மை 60 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக குறைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் பெற மாற்றுத் திறனாளிகளின் ஆண்டு வருமான வரம்பினை ரூ.3.00 இலட்சமாக உயர்த்தி அரசாணை (நிலை) எண்.41, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 28.05.2019–இல் ஆணையிடப்பட்டுள்ளது.

தேசிய சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் செயல்படத்தப்படும் மூன்று ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெற கீழ்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | தகுதி – ஆதரசற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வருமானம் – வறுமைக்கோட்டிற்குக் கீழ்.<br>வயது – 60 மற்றும் அதற்கு மேல். |
| 2. | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதியத் தேசியத் திட்டம் | தகுதி – ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.<br>வருமானம் – வறுமைக்கோட்டிற்குக் கீழ்.<br>வயது – 40 மற்றும் அதற்கு மேல். |
| 3. | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | வருமானம் – வறுமைக்கோட்டிற்கு கீழ்.<br>வயது – 18 வயது மற்றும் அதற்கு மேல்.<br>ஊனம் நிலை – 80 சதவீதம் மற்றும் அதற்கு மேல். |

தமிழ்நாடு அரசின் முழு நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெற கீழ்கண்ட தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாற்றம் செய்யப்பட்ட நிபந்தனைகள் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | தகுதி – வேலையற்றவராக இருத்தல் வேண்டும். தனியார் மற்றும் சுயவேலையில் இருப்பின் ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>வயது – 18 மற்றும் அதற்கு மேல்<br>ஊனம் நிலை – 40 சதவீதம் மற்றும் அதற்கு மேல். |
| 2. | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | தகுதி – ஆதரவற்ற விதவையாக இருத்தல் வேண்டும்.<br>வயது – 18 மற்றும் அதற்கு மேல்<br>அசையா சொத்து ரூ.50,000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 3. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | தகுதி – ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வயது – 60 மற்றும் அதற்கு மேல்.<br>நிலமற்ற விவசாயத் தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.<br>அசையா சொத்து ரூ.50,000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 4. | ஆதரவற்ற/ கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | தகுதி – ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.<br>வயது – 30 மற்றும் அதற்கு மேல்.<br>சட்ட பூர்வமாக விவாகரத்து அல்லது குறைந்தது 5 ஆண்டுகள் கணவனால் கைவிடப்பட்டவராக இருத்தல் வேண்டும்.<br>அல்லது நீதிமன்றத்திலிருந்து சட்டப்பூர்வமாக பிரிவு சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அசையா சொத்து ரூ50,000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் |
| 5. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | தகுதி – ஆாரவற்ற திருமணமாகாத பெண்ணாக இருத்தல் வேண்டும்.<br>வயது – 50 மற்றும் அதற்கு மேல்.<br>அசையா சொத்து ரூ.50,000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |

80 வயதைக் கடந்த ஓய்வூதியம் பெற்று வரும் 1.94 இலட்சம் பயனாளிகளின் சிரமத்தினை போக்கும் வகையில், அப்பயனாளிகளின் வீட்டிற்கே சென்று இந்திய அஞ்சல் துறையின் மின் பண அஞ்சல் (eMO) மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதற்கென, ஆண்டுக்கு ரூ.4.40 கோடி கூடுதலாக செலவிடப்படுகிறது.

**ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் இதர பயன்கள்**

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகைகளின் போது. சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது. அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ சன்ன ரக அரிசியும், உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ சன்ன ரக அரிசியும் வழங்கப்படுகிறது.

## அத்தியாயம் – 7

## முடிவுரை

குழந்தைகள், பெண்கள், மூத்த குடிமக்கள், மூன்றாம் பாலினர் என சமூகத்தில் உள்ள அனைத்து நலிந்த பிரிவினரின் சமூக பொருளாதார முன்னேற்றத்தினை அவர்களது வாழ்வில் கொண்டு வர சமூகநலத்துறை அயராது பாடுபடுகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் முழு வளர்ச்சியையும், முதியோர் மற்றும் மூன்றாம் பாலினருக்கு கௌரவமான வாழ்க்கையினையும் உறுதி செய்யும் வகையில் பலவிதமான நலத் திட்டங்களை முனைப்புடன் வடிவமைத்து இத்துறை செயல்படுத்தி வருகிறது. மேலும், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள், சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகள் மற்றும் ஒழுக்கரீதியான அபாயங்களுக்கு உட்பட நேரிடும் மகளிர் ஆகியோரின் நலனுக்காகவும் இத்துறை பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அத்துடன் பல்வேறு சமூக நலச் சட்டங்களை உரிய இயக்கமைப்புடன் குறித்த நேரத்திற்குள் செயல்படுத்துவதால் இடருற்ற பிரிவினர் தங்களது உரிமையை பெறவும் இத்துறையின் செயல்பாடு துணை நிற்கிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் அனைத்து நிலைகளிலும் உயர்தரமான முழு வளர்ச்சிப் பணிகளை ஊக்குவித்து உறுதி செய்யும் வகையிலும், அதன் மூலம் சமுதாய பங்களிப்புடன், அனைத்து நிலையில் உள்ள மக்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்து அவற்றை மேம்படுத்தி முழு பங்கேற்புடன் நலப்பணிகள் நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளை சென்றடைந்திடும் வகையில் செயல்படுகிறது.

சமுதாயத்தில் உள்ள அனைத்து தரப்பு மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதிப்படுத்தும் விதத்தில் சமூகநலத்துறையின் செயல்பாடுகள் இருப்பதால், தமிழகம் நாட்டிற்கே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

**Dr.V.சரோஜா**
**சமூக நலம் மற்றும் சத்துணவுத்**
**திட்டத் துறை அமைச்சர்**

**இணைப்பு**

**வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு – 2019–2020**

**மானியக் கோரிக்கை எண்.45**

**சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு ₹ 5,30,551 இலட்சம்.

| **2019–2020 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு** | | |
|---|---|---|
| **கணக்குத் தலைப்பு** | | **(₹இலட்சத்தில்)** |
| வருவாய் பகுதி | | **ஒதுக்கீடு** |
| 2059 | பொதுப் பணிகள் | 246.00 |
| 2225 | சமூக நல இயக்ககம் | 35.40 |
| 2235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 15,137.90 |
| 2235 | சமூக நல இயக்ககம் | 1,10,317.86 |
| 2235 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 13,736.73 |
| 2236 | தலைமைச் செயலகம் | 31.48 |
| 2236 | சமூக நல இயக்ககம் | 1,79,410.49 |
| 2236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 2,07,739.32 |
| 2251 | தலைமைச் செயலகம் | 542.99 |
| 2551 | சமூக நல இயக்ககம் | 0.01 |
| **வருவாய் பகுதி மொத்தம்** | | **5,27,198.18** |
| மூலதனப் பகுதி | | |
| 4235 | சமூக நல இயக்ககம் | –– |
| 4235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 1,236.01 |

| 2019–2020 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|
| கணக்குத் தலைப்பு | | (₹இலட்சத்தில்) |
| 4236 | சமூக நல இயக்ககம் | 0.01 |
| 4236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 2,117.12 |
| மூலதனப் பகுதி மொத்தம் | | 3,353.14 |
| 7610 | அரசு பணியாளர்களுக்கான கடன்கள் | 0.02 |
| கடன் பகுதி மொத்தம் | | 0.02 |
| முழு மொத்தம் | | 5,30,551.34 |

**முழு மொத்தம் :**

| | | |
|---|---|---|
| வருவாய் பகுதி | : | ₹5,27,198.18 இலட்சம் |
| மூலதனப் பகுதி | : | ₹ 3,353.14 இலட்சம் |
| கடன் பகுதி | : | ₹ 0.02 இலட்சம் |
| மொத்தம் | : | **₹ 5,30,551.34 இலட்சம்** |

**அல்லது**

**₹ 5,305.51 கோடி**

2019–2020ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண்.41ன் கீழ் ₹ 4,060.54 கோடி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.